# சிறுவர்களிடமிருந்து சிறுவர்களுக்காக உருவான சிறுவர் எழுத்துப் படிவங்களின் நடையியல்

**மோகன தாஸ் ராமசாமி / Mohana Dass Ramasamy***
இந்திய ஆய்வியல் துறை / Department of Indian Studies
மலாயாப் பல்கலைக்கழகம் / University of Malaya
rmohana_dass@um.edu.my

Manuscript received 16 March 2021
Manuscript accepted 30 April 2021
*Corresponding author / First Author

## Abstract
It can be assured that the children's literature is still at the level of finding its development path and evolving in Malaysia. It is yet reached its matured level. With not many writers have explored to develop his genre, there were new developing trend among the children is emerging now. This is what referred to as Peer-to-Peer Assisted Children's Literature. Sort of write-ups developed by the children to other children were published in the Malaysian dailies, in the forms of stories, articles, excerpts and other scripts. These write-ups were meant to be a guide for other growing students, as they have been producing these works with a variety of stylistic features. The children have chosen the best ways to present their ideas elegantly and attractively to others, using vocabulary in their own style. Beyond the language and grammatical restrictions, the children's writing can be seen as a medium of expressing their individual stylistics in writing, on a stand-alone basis. Based on this, about 25 articles published in the dailies were selected, collected and analyzed to identify their stylistic features and reveal them accordingly.

**Keywords**: Children's Literature, Malaysian Children's Literature, 'Small Literature' Works, Children's Literature Stylistic

## ஆய்வுச்சுருக்கம்
மலேசிய தமிழ் வளர்ச்சிச் சூழலில் சிறுவர்/குழந்தை இலக்கிய வளர்ச்சி குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே தற்போது வளர்ந்துவரும் சூழலில், இவ்விலக்கிய வகையினைத் தமக்காக தாமே, சிறுவர்கள்/குழந்தைகள், வளர்க்கும் சூழல் தற்போது உருவாகி, வளர்ந்துகொண்டு வருகின்றது. இதனையே சிறுவர்களிடமிருந்து சிறுவர்களுக்காக உருவான சிறுவர் எழுத்துப் படிவங்களின் (Peer-to-Peer Assisted Children Literature) எனக் குறிப்பிடுகின்றோம். மலேசிய தினசரிகளில், குறிப்பிட்ட தினங்களில் வெளிவரும் மாணவர் அங்கம், சிறுவர் அரங்கம் ஆகிய அங்கங்களில் இவர்களின் கதைகள், கட்டுரைகள், துணுக்குகள் மற்றும் ஏனைய எழுத்துப்படிவங்கள் வெளிவந்த வண்ணமாக உள்ளன. வளர்ந்த மாணவர்கள் வளரும் மாணவர்களுக்கு வழிகாட்டும் வழித்தடமாக இவை அமைந்துள்ளன. இந்தப் படைப்புகளைப் பன்முக நடையியல் தன்மைகளோடு இவர்கள் எழுதிப்படைத்து வருகின்றனர். இவர்களது எழுத்துப்படிவங்கள் பன்முக நடைத்தன்மைகளை வெளிப்படுத்திக் காட்டுகின்றன. ஒருவர் தனது கருத்துகளை அல்லது தகவல்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தப்படும் மொழியின் அடிப்படை நியதிகளை இலக்கண விதிகளாக அமைத்திருக்க, அந்த விதிகளுக்கு உட்பட்டு, தனக்கே உரித்த பாணியில் சொற்களஞ்சியங்களைப் பயன்படுத்தி, நேர்த்தியான முறையில் தனது கருத்துகளைக் கனக்கச்சிதமாகவும் கவர்ச்சியாகவும் பிறருக்கு வழங்கும் பாங்கினையே சிறுவர் நடையியல் எனக் காணலாம். மொழி, இலக்கணக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டு, சிறுவர்கள்/குழந்தைகள் சுயந்த நிலையில், அறிந்தும் அறியாமலும் விதர்ந்த நிலையில் உருவாக்கும் எழுத்துப்படிவங்களில் அவர்களது தனிப்பட்ட நடையியல் வெளிப்பட்டிருப்பதனைக் காண முடிகிறது. அத்தகைய தன்மையினை அடிப்படையாகக் கொண்டு, நாளிதழ்களில் வெளியான 25 கட்டுரைகளைத் தெரிவுசெய்து, அவற்றின்கண் காணப்பெறும் நடையியல் சிறப்புகளை அடையாளம் கண்டு, அவற்றின் மொழிநடையினை இக்கட்டுரை வெளிப்படுத்திக் காட்டியுள்ளது.

**தரவுச்சொற்கள்**: சிறுவர் இலக்கியம், மலேசிய சிறுவர் இலக்கியம், 'சிறு இலக்கியப்' பணிகள், சிறுவர் இலக்கியத்திய நடையியல்.

**முன்னுரை**

குழந்தை இலக்கியங்கள் என்றாலும் சிறுவர் இலக்கியங்கள் என்றாலும் பெரும்பாலும் பெரியோர்களே படைத்து வழங்கும் பாங்கு பெரும்பான்மையாக உள்ளது. மலேசிய தமிழ் வளர்ச்சிச் சூழலில் சிறுவர்/குழந்தை இலக்கிய வளர்ச்சி குறிப்பிட எல்லைக்குள்ளேயே தற்போது வளர்ந்துவரும் சூழலில், இவ்விலக்கிய வகையினைத் தமக்காகத் தாமே, சிறுவர்கள்/குழந்தைகள், வளர்க்கும் சூழல் தற்போது உருவாகி, வளர்ந்துகொண்டு வருகின்றது. இதனையே சிறுவர்களிடமிருந்து சிறுவர்களுக்காக உருவான சிறுவர் எழுத்துப் படிவங்களின் (Peer-to-Peer Assisted Children Literature) எனக் குறிப்பிடுகின்றோம்.

மலேசியத் தினசரிகளில், குறிப்பிட்ட தினங்களில் வெளிவரும் மாணவர் அங்கம், சிறுவர் அரங்கம் ஆகிய அங்கங்களில் இவர்களின் கதைகள், கட்டுரைகள், துணுக்குகள் மற்றும் ஏனைய எழுத்துப்படிவங்கள் வெளிவந்த வண்ணமாக உள்ளன. வளர்ந்த மாணவர்கள் வளரும் மாணவர்களுக்கு வழிகாட்டும் வழித்தடமாக இவை அமைந்துள்ளன. இந்தப் படைப்புகளைப் பன்முக நடையியல் தன்மைகளோடு இவர்கள் எழுதிப் படைத்து வருகின்றனர். இவர்களது எழுத்துப்படிவங்கள் பன்முக நடைத்தன்மைகளை வெளிப்படுத்திக் காட்டுகின்றன.

நடையியல் என்பதனைப் பல்வகைகளில் விளக்கிச் செல்லலாம். ஒரு செய்தியை அல்லது தகவலைத் தெரிவிப்பதற்கு ஒருவர் பயன்படுத்தும் மொழிநடைமுறை எனச் சுருக்கமாகவும் சொல்லலாம். ஒருவர் தனது கருத்துகளை அல்லது தகவல்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தப்படும் மொழியின் அடிப்படை நியதிகளை இலக்கண விதிகளாக அமைத்திருக்க, அந்த விதிகளுக்கு உட்பட்டு, தனக்கே உரித்த பாணியில் சொற்களஞ்சியங்களைப் பயன்படுத்தி, நேர்த்தியான முறையில் தனது கருத்துகளைக் கனக்கச்சிதமாகவும் கவர்ச்சியாகவும் பிறருக்கு வழங்கும் பாங்கினையே நடையியல் எனக் குறிப்பிடலாம்.

மொழி, இலக்கணக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டு, சிறுவர்கள்/குழந்தைகள் சுயந்த நிலையில், அறிந்தும் அறியாமலும் விதர்ந்த நிலையில் உருவாக்கும் எழுத்துப்படிவங்களில் அவர்களது தனிப்பட்ட நடையியல் வெளிப்பட்டிருப்பதனைக் காணலாம். ஒரே செய்தி, பன்னோக்கு முறைகள், பன்முகச் செய்திகள், நானாவித நடைகள் என குழந்தைகள்/சிறுவர்கள் தங்களது சிந்தனைச்சாரல்களை வெளிப்படுத்திக் காட்ட முயல்கின்றனர். இதன்வழி, இவர்களது மொழி ஆற்றலையும் மொழித்திறன்களையும் கண்டுகொள்ள வழியேற்படும். அதன்வழி அவர்களுடைய தேவைகள் யாவை என்பதனையும் அறிந்துகொள்ள இயலும். இதன்வழி, மலேசிய குழந்தை/சிறுவர் இலக்கிய வளர்ச்சி உலகின் முத்திரைப் பதித்துக்கொண்டிருக்கும், சிறுவர்களிடமிருந்து சிறுவர்களுக்காக உருவான சிறுவர் எழுத்துப் படிவங்கள் எனும் இவ்வகைச் 'சிறு இலக்கியப்' பணிகளின் பங்களிப்பினை அடையாளம் காண்பதோடு, இதனை நன்முறையில் வளர்த்தெடுக்க தடமைக்க இவ்வாய்வு உறுதுணையாக அமையும் என நம்பலாம்.

**மலேசிய சிறுவர் இலக்கியம்: பின்புலம்**

மலேசியாவில் சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்ட வரிசையில் பல இதழ்கள், சஞ்சிகைகள், ஊடகங்கள் என இடம்பிடித்திருக்கின்றன. 'சோலை' (கா. இராமநாதன்), தமிழ் முரசின் (கோ. சாரங்கபாணி), 'தமிழ் முரசு மாணவர் மணிமன்ற 'மணியோசை', தமிழ் நேசனின் "சிறுவர் அரங்கம்' (1963 முதல்), 'தமிழ் மலரின்' 'சிறுவர் பேரவை' 'மலைநாடு' -இன் (1965) சிறுவர்களுக்கென வெளியிடப்பட்ட நான்கு பக்கங்கள், தமிழ் நேசன். தமிழ் ஓசை, தினமணி ஆகிய நாளேடுகளின் சிறுவர் அங்கம் சிறப்புப் பிரிவு என மலேசிய சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்குக் கைக்கொடுத்து வளர்த்த இதழ்கள் பல இருந்தன. இந்த வரிசையில், திங்கள் (மாத இதழ்களும் 'ஜனோபகாரி', 'வெற்றி', 'வளர்ச்சி', 'உதயம்' போன்ற இதழ்களும் சிறுவர் இலக்கியத்திற்கு ஊக்கமளித்து வெளியிட்டன.

தொடர்ந்து 'பொன்னி', 'மலைமகள்', 'முத்தமிழ்', 'அரும்பு போன்ற திங்கள் இதழ்களிலும் சிறுவர் இலக்கியப். தமிழகத்தில் 'பாலதீபிகை', 'பாலியர் நேசன்'. 'பாப்பா மலர்', 'பாலர் மலர்', 'அணில்', "கண்ணன்', 'சங்கு', 'அம்புலிமாமா' போன்ற பல சிறுவர் இலக்கிய இதழ்கள்

வெளிவந்தன. தமிழகத்தின் சிறுவர் இலக்கிய ஈடுபாடு மலேசியச் சிறுவர் இலக்கியத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தின. இவற்றோடு மலேசிய வானொலிப் பிரிவும் இணைந்து செயல்பட்டது. இத்துறையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தியது. இந்தத் தொடர்ச்சியானது இன்றுவரை தொடர்ந்தும், வளர்ந்தும் வந்துகொண்டிருப்பதும் இத்துறை வளர்ந்து கொண்டிருப்பதற்கான நல்ல அறிகுறி (மோகன தாஸ், 2018, ப. 347).

மலேசியாவில் சிறுவர் இலக்கிய வகைகள் என பார்க்கும்போது முக்கியத்துவம் பெருபவை கவிதைகள், நாடகங்கள், சிறுகதைகள் மற்றும் கட்டுரைகள் ஆகும். இவ்வகை இலக்கிய வடிவங்கள் ஒருவகையில் தனித்துவம் பெற்றவையாக இருக்க, அனைத்திலும் தனிச்சிறப்புடை இலக்கியமாக தனிச்சிறப்பு வாய்ந்ததாக அமைவது கவிதை இலக்கியமே. அதற்கடுத்த நிலையில் கதை, கட்டுரை தொடர்கின்றன. புதியதாக இத்துறையில் எழுத முயல்வோர் கையில் எடுக்கும் துறையாகக் கட்டுரை வடிவம் அமைவதைக் காணலாம். (மலேசியாவில் சிறுவர் இலக்கிய வளர்ச்சி பற்றி மேலும் அறிந்துகொள்ள குமரன் கப்பிரமணியம், (2018), மலேசியாவில் சிறுவர் இலக்கியம் மற்றும் சி.சிவகுமார் 2018, மலேசியாவில் சிறுவர் இலக்கியம் ஆகிய இரு வெளியீடுகளைக் கண்டுகொள்ளலாம்.)

இவ்வாறு சிறுவர் இலக்கிய வளர்ச்சி ஒருபுரம் வளர்ந்திருக்க, மறுபுறம் சிறுவர்கள் தாமாகவே உருவாக்கி இருக்கும் சில எழுத்துப்படிவங்களையும் காண்கின்றோம். அவற்றை ஆராய்ந்து நோக்கும்போது, இச்சிறு இலக்கியவடிவங்களின் படைப்பாளுமையின் சிறப்பினைச் சீர்தூக்கிப் பார்க்க வழியேற்படும். அத்தகைய சிறுபணியை ஆற்றுவதே இவ்வாய்வின் முக்கிய வேலை.

## ஆய்வுநெறிமுறை

இந்த ஆய்வு மாணவர்களின் படைப்புகளை அடிப்படையாகக் கொண்டே நிகழ்த்தப்பட்ட ஆய்வாகும். மாணவர்கள் மாணவர்களுக்காக உருவாக்கிய படைப்புகள் பலதரப்பட்டவையாக உள்ளன. அவற்றுள் ஆரம்பப் பள்ளி மானவர்களுள் குறிப்பாக, மேனிலை ஆரம்பப் பள்ளி மாணவர்கள் எழுதி, மலேசிய நாளிதழ்களில் வாராந்திரப் படைப்புகளாக உருவாக்கப்பட்டிருக்கும் படைப்புகளை அடையாளம் கண்டு, அவற்றின் தனித்தன்மைகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைந்துள்ளது.

மலேசியாவில் வெளிவரும் மலேசிய நண்பன் எனும் பத்திரிகையில் 1.7.2018 முதல் 28.4.2019 வரையிலும் வெளிவந்த மானவர்களின் படைப்புகள் இதற்காக தேர்வு செய்யப்பட்டு, ஆய்வுசெய்யப்பட்டன. அத்தகைய தன்மையில் அமைந்து, இவ்வாய்விற்காக தேர்வுசெய்யப்பட்ட கட்டுரைகளின் எண்ணிக்கை 24 ஆகும். அவ்வகை எழுத்துப்படிவங்களை அடையாளம் கண்டு, அவற்றின்கண் காணப்படும் நடையியல் தன்மைகளைப் பதிவுசெய்யும் நோக்கமாக, அப்பத்தி அத்தகைய தன்மையினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட சுமார் 24 கட்டுரைகளைத் தெரிவுசெய்து, அவற்றின்கண் காணப்பெறும் நடையியல் சிறப்புகளை அடையாளம் கண்டு, வெளிப்படுத்திக் காட்டுவதும் இதன் நோக்கங்களுள் அடங்கும்.

## நடையியல் ஆய்வின் பன்முகத்தன்மை

தமிழ்ப் பள்ளிகளில் கல்வி பயிலும் மேன்நிலை மாணவர்களின் நடையியலில் பன்முகத் தன்மையினை ஆராயும் நோக்கினில் இந்தக் கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் பட்சத்தில் மாணவர்களது கட்டுரைகள் நவீன ஆய்வின் கோட்பாட்டுப் பாணியில் ஆராயப்பட்டுள்ளன. நாளிதழில் பிரசுரிக்கப்பட்ட இக்கட்டுரைகள் தனிநிலை மாணவர்களின் மொழிநடையாக இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட மேன்னிலைக் கூட்டத்தைச் சமூகத்தைச் சார்ந்த மாணவர்கள் இவர்கள் எனக் குறிப்பிடும் அளவிற்கு ஒரு குழுமமாக இவர்களைக் காணலாம். அத்தகு வகையில் இவர்களது கட்டுரைகளின் தேர்வுத் தலைப்பும் எழுத்தும் அமைந்துள்ளது. இவ்வகை நடையியல் ஆய்வு மாணவர்களது மொழியில் வழங்கும் இலக்கிய வளத்தை முழுமையாகக் கிரகித்துக்கொள்ள உதவும் துறையாக அமைவதால், இதன்வழி மாணவர்கள் உருவாக்கி இருக்கும், படைப்புகளின் தனித்துவத்தினைக் காணவும் வழியுள்ளது. இதன்வழி, மாணவர்களது உரைநடைகளின் காணப்படும் மொழிச்சூழலை விளக்கி, அவற்றின் சமகால மொழிச்சூழல் கைக்கோண் முறையும் விளங்கிக் கொள்ளவும் இத்துறை உதவுகின்றது. இந்த அறிவானது புதைநிலைச் செய்திகளோடு தெரிநிலைச் செய்திகளையும் உள்வாங்கிக் கொள்ள நடையியல் அறிவு வழித்தடமாக உள்ளது (முனீஸ்வரன், 2018, ப.2).

**நடையியல் என்றால் என்ன?**

நடையியல் என்பது சொல் தேர்வு, வாக்கிய அமைப்பு எழுத்தாளரின் தனிப்பட்ட முறையை அல்லது நடையைக் காண்பிப்பது ஆகும். விளக்கும் உத்தி, அழகியல் கோட்பாட்டின் அடைவு நிலை, எழுத்தாளரின் கருத்துத் தெரிவிக்கும் மனோபாவம் என்பனவும் நடையியல் எனப்படுகின்றன (முனீஸ்வரன், 2018, ப.11). பேச்சு மொழி, பிறமொழிச் சொற்கள், கலப்பாக்கச் சொற்கள், புரிதலுக்குச் சிக்கலான சொற்கள், உவமை அணி பயன்பாடு என தம் கருத்துகளைப் பிறருக்கு எடுத்துச்சொல்ல பயன்படும் கருவிகளின் தகுந்த கலவைப் பயன்பாடு என்பது பொதுவான கருத்தாக ஏற்கலாம். இந்த நிலையிலேயே இந்த ஆய்வும் மாணவர்களின் படைப்புகளை ஆய்வுசெய்கின்றது. அவ்வாறு உருவாக்கப்பட்ட கட்டுரைகள் யாவும் மாணவர்களது சிந்தனை ஆற்றலைப் பெருக்குவதுடன் மட்டுமல்லாது, அவர்களின் மொழி வளத்தையும் பெருகுகின்றது என்றுரைக்கும் மலர்விழி (2013, ப.34) கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது.

இக்கருத்தினைச் சற்று உற்றுநோக்குவோமாயின், Hallliday (1986) அவர்களின் எழுத்து மொழிக் கோட்பாட்டின் அடிப்படையில் வேறொரு விதமாகக் காண வாய்ப்புள்ளது. இவர் ‘எழுத்து மொழி’ என்பது தரப்படுத்தப்பட்டுள்ள நடை என்கிறார். எழுத்து மொழியில் தயக்க நிலை, உள்ளுணர்வுகள், சந்தேகம் போன்றவற்றைக் வெளிப்படையாகக் காட்ட முடியாது; இதனை நாம் எழுத்துமொழியின் வாயிலாகக் காண்பது அவ்வளவு எளிதான விடயமல்ல. எனவே, நடையியலின் எளிய தன்மையாக, Hallliday (1986) கோட்பாட்டின் அடிப்படையில் எழுத்து வழக்குச் சொல், சொற்றொடர், வாக்கியம் என மூன்று வகையாகப் பிரித்துப் பார்க்க வழியுள்ளது (முனீஸ்வரன், 2018, ப.3). இந்த மூன்று வகைகளோடு, மானவர்களது படைப்புகளில் காணப்படும் சில மாறுபட்ட மொழிக்கையாடல்களையும் பொதுநிலையில் இவ்வாய்வு தேர்வுசெய்து பார்த்துள்ளது.

படைப்புகளை உருவாக்கும் மாணவர் தம் படைப்பிற்குத் தகுந்த மொழிக்கூறுகளைத் தேர்வுசெய்கின்றனர். அவ்வாறு தேர்வுசெய்யப்படும் அனைத்து மொழிக்கூறுகளும் பொருளுடையவையாக அமைகின்றன என்று Halliday (1971) கூறுவார். இக்கூற்றுக்கேற்ப மாணவர்களது படைப்புகளில் பல்வாறான மொழிக்கூறுகளைக் கையாண்டுள்ளனர் என்பது கண்கூடாகக் காணமுடிகின்றது. அவை முறையே,

அ. சொற்தேர்வு (எழுத்து மொழி, பேச்சுமொழி, மொழிக்கலப்பு, உணர்ச்சிக்கிளவிகள்)
ஆ. தொடர்கள் (பிறவகைத் தொடர்கள், வினாத்தொடர்கள், தனிவாக்கியங்கள், தொடர் வாக்கியங்கள், கலப்பு வாக்கியங்கள்)
இ. அடைகள் (பெயரடைகள், வினையடைகள்)
ஈ. தொகைகள்
உ. பொன்மொழிகள் / சான்றோர் மொழிகள்
ஊ. பழமொழிகள் / மரபுத்தொடர்கள்

என வரிசைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

**மாணவர்களது படைப்புகளின் பொதுத் தன்மைகள்**

இந்த ஆய்விற்காகத் தேர்தெடுக்கப்பட்ட கட்டுரைகளின் எண்ணிக்கை மொத்தம் 24. அவை பின்வரும் தலைப்புகளில் இயற்றப்பட்டுள்ளன.

அ. ஆசிரியர் பற்றி

- ஆசான் என் தெய்வம் (Sept 10, 2018)
- நான் ஓர் ஆசிரியரானால் (Nov 19, 2018)
- அன்பான ஆசிரியர் (Dec 17, 2018)
- எனக்கு பிடித்த ஆசிரியர் (Jan 21, 2019)
- என் ஆசிரியர் (Feb 4, 2019)
- எனக்கு பிடித்த ஆசிரியர் (Feb 18, 2019)

ஆ. இயற்கை

- தென்னை மரம் (Oct 1, 2018)
- காடுகளின் பயன் (Nov 26, 2019)
- காடுகளின் பயன் (Jan 28, 2019)
- ஆற்றின் பயன் (Feb 18, 2019)
- காடுகளின் பயன் (Feb 25, 2019)

இ. தமிழ் மொழி

- தமிழுக்குத் தொண்டு செய்வோர் (July 16, 2018)
- பாரினில் சிறந்த மொழி (Aug 13, 2018)
- கனியிடை ஏறிய சுவையும் (Dec 3, 2018)
- தமிழ் மொழி (Mac 4, 2019)
- தமிழ் மொழியின் சிறப்பு (Mac 4, 2019)

ஈ. தமிழர் கலாச்சாரம் – பண்பாடு

- தமிழ் மாதங்கள் (July 30, 2018)
- ஆரோக்கியமான வாழ்க்கைக்கு மூலிகைகள் (Dec 10, 2018)
- பொங்கல் திருநாள் (Jan 14, 2019)
- பொங்கல் (Mac 11, 2019)

உ. வாசிப்பின் நன்மை

- இராஜமௌலி வாசித்த கதைப் புத்தகம் (July 1, 2018)
- வாசிப்பதால் ஏற்படும் நன்மைகள் (July 9, 2018)
- வாசிப்பதால் ஏற்படும் நன்மைகள் (July 19, 2018)
- வாசிப்பின் அவசியம் (Sept 3, 2018)

**ஒரு மாதிரி ஆய்வு (**என் ஆசிரியர்)

என் ஆசிரியர் எனும் கட்டுரை ஒன்று மாணவர்களது கட்டுரைத் தன்மையினை ஆராயப் பயன்படுத்தப்பட்டது. இக்கட்டுரை, மாணவர்களின் சொற்களஞ்சியம் மிகவும் விசாலமாக இல்லாநிலையைக் காட்டுகின்றது. இருப்பினும், அது ஓரளவு பாராட்டும் அளவிற்குப் போதுமானதாக இருப்பதைக் காண முடிந்தது. அவ்வகையில் என் ஆசிரியர் எனும் கட்டுரையில் அவர்களது சொற்களஞ்சிய அமைப்பினைப் பின்வருமாறு காணலாம். இந்த அட்டணையில் பெரிய அளவில் காணப்படும் /என்/, /அவர்/, /ஆசிரியர்/, /மிகவும்/ ஆகிய சொற்கள் அதிகமாகக் கையாளப்பட்டிருப்பதைக் காண முடிகின்றது.




கீழ்க்காணும் அட்டவணையோ, இந்த ஆய்விற்காகத் தேர்வுசெய்யப்பட்ட மாணவர்களது அனைத்துப் படிப்புகளின் சொற்கையாடல்களையும் விளக்கும் அமைப்பாக உள்ளது. மொத்தம் 1812 சொற்களின் பயன்பாட்டில் இக்கட்டுரைகள் பயன்பாடு கண்டுள்ளன. இந்த அட்டவணையிலும் /அவர்/ எனும் சொல்லே அதிகமாகக் கையாளப்பட்டிருக்கின்றது.




மேற்காணும் அட்டவணை மாணவர்களது படைப்புகளில் தமிழ் மொழியில் காணப்படும் அனைத்துவகைச் சொற்களின் பயன்பாடுகளையும் காண முடிகின்றது. அந்த வரிசையில்,

அ. பெயர்

- பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், பதிலிடுப்பெயர், ஆகுபெயர் என அனைத்து வகைச்சொற்களையும் காண முடிகின்றது.

ஆ. வினை

- வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், ஈறுகெட்ட எதிர்மறைகள் என பல்வகைச் சொற்களையும் காண முடிகின்றது.


இ. இடை

- சொல்லளவில் சொற்களுக்கு அங்கங்களாகக் காணப்படும் இடைச்சொற்கள் (விகுதிகள், இடைநிலைகள்); சொற்களோடு இணைந்த இடைச்சொற்கள் (வேற்றுமைகள், உம், ஏகார இடைச்சொற்கள்) அல்லது அடுத்த நிலை காணப்படும் இடைச்சொற்கள் (முன்னொடுகள் – முன் – பின்) ஆகியவற்றை ஆளுமையுடன் கையாளும் தன்மையினையும் காண முடிந்தது.

ஈ. உரி

- மிகவும் குறைவாகக் கையாளப்பட்ட சொல்வகை (அதி, மா)


கீழ்க்காணும் அட்டவணை மாணவர்களின் சொற்கையாடல் திறனை விவரிக்கின்றன. முதல் அதிகமாக பயன்படுத்தப்பட்ட பட்டியல் /அவர்/ எனும் சொல் எந்தெந்த வகைகள் கையாளப்படிருக்கின்றது என்பதனைக் காண முடிகின்றது. அதே போல, மிகக் குறைவாக கையாளப்பட்ட /ஆசிரியரின்/ எனும் சொல்லின் பயன்பாடும் கீழே காட்டப்பட்டுள்ளன. இவையும் மாணவர்களின் மொழிநடையின் ஆளுமையாகவே காண முடிகின்றது.





மிகக் குறைவாக கையாளப்பட்ட சொல் - /ஆசிரியரின்/





திருத்தப்பட்ட ஆய்வாக, வெறுமனே /ஆசிரியர்/ எனும் சொல்லின் அடிப்படையில் ஆராய முற்படின், கீழ்க்காணும் கண்டுபிடிப்பினைக் காண முடிகின்றது.




கீழ்க்காணும் அட்டவணைகள் மாணவர்களின் இடைச்சொல் சொற்கையாடல் திறனை விவரிக்கின்றன. முதல் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட பட்டியல் /எனவே/ எனும் சொல் எந்தெந்த வகைகள் கையாளபடிருக்கின்றது என்பதனைக் காண முடிகின்றது. இந்த இடைச்சொல்லின் பயன்பாடு மிகவும் முக்கியமானதாகக் காண வேண்டிய இடத்தில் உள்ளோம்; ஏனைய இடைச்சொற்கள் போலன்றி இவ்வகை இடைச்சொல்லின் பயன்பாடு முக்கியமாக, தேவைப்படும் இடங்களில் மட்டுமே இடம்பெறும். தமது கருத்துகளை நிலைப்படுத்தவும், உறுதிப்படுத்தவும் இதன் கையாடல் முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.




ஒரே ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்பட்ட சொல்லாக /பெருமக்கள்/ பயன்படுத்தப்பட்டிருக்கும் முறையினையும் இவ்விடம் காணலாம்.




## சொற்வகைகளும் அவற்றின் பயன்பாடும்

நமக்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களை ஆராய்ந்தபோது கிடைக்கப்பெற்ற சொல்வகைக் கையாடல் திறன்களை கீழ்க்காண்போம். இவற்றை ஒரேஒரு முறை இருமுறை, மூன்றுமுறை, நான்குமுறை, ஐந்துமுறை பயன்படுத்தப்பட்ட சொற்கள் என இவற்றின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு இவற்றை வகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. இந்த வரிசையில் சுமார் 1812 சொற்களின் ஒட்டுமொத்தப் பயன்பாட்டில் மாணவர்களது ஆக்கத்தன்மையின் அடிப்படையில் காண்போமானால் அதிகப்பட்சமாக 21 வகைகளில் இச்சொற்களைக் கையாண்டிருப்பதைக் காண முடிகின்றது. அதனைக் கீழ்க்காணும் அட்டவணையின் மூலமாகக் காணலாம்.

| சொல் எண்ணிக்கை | முறை | சான்றாதாரம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | 1450 | பெருமக்கள், நெஞ்சார |
| 2 | 198 | வெற்றி, வைக்கும், வைத்துக் |

| | | |
|---|---|---|
| 3 | 70 | வாசிப்பு, வாய்ந்த, வெள்ளம் |
| 4 | 29 | முன், வாசிக்கும், வாசித்தால் |
| 5 | 12 | வாழ, விலங்குகள், வைத்து |
| 6 | 11 | மீது, மேலும், வளரும் |
| 7 | 11 | நீர், போன்ற, வாசிப்பதால் |
| 8 | 2 | கொண்டு, போல் |
| 9 | 2 | என்பது, நம் |
| 10 | 3 | என்று. தமிழ்மொழி |

| | | |
|---|---|---|
| 11 | 1 | நான் |
| 12 | 1 | எனவே |
| 13 | 2 | ஆசிரியர், காடுகள் |
| 14 | 1 | மொழி |
| 15 | 2 | ஒரு, வேண்டும் |
| 16 | - | |
| 17 | 1 | பொங்கல் |
| 20 | 2 | தமிழ், மிகவும் |
| 22 | 1 | நாம் |
| 24 | 1 | என் |
| 34 | 1 | அவர் |

**மாணவர்களது படைப்புகளில் காணப்படும் ஒரேஒரு முறைமட்டும் பயன்படுத்தப்பட்ட சொற்கள் பட்டியல்**

| | | |
|---|---|---|
| **வினைச்சொல் வகை** | சரளமாக | நேசிப்போம் |
| அகப்பட்டேன் | சாப்பிட்டால் | படுகின்றன |
| அடர்த்தியாக | சாரும் | பயனளிக்கின்றன |
| அமைப்பர் | சாவதில்லை | பறக்கச் |
| அலங்கரித்துள்ளன | சுட்டிக்காட்டுவதுடன் | பாடுகின்றனர் |
| இலவசமாகப் | சுத்தகரித்து | பாதிப்படையவில்லை |
| இறக்கினர் | சுறுசுறுப்பாகச் | பாதிப்படைவதில்லை |
| இன்றியமையாதது | சேர்க்கும் | பிரார்த்திக்கின்றேன் |
| உட்கொண்டு | சேவையாற்றுகிறார்கள் | புகழ்ந்துரைத்துள்ளார் |
| உணரவேண்டும் | தாக்குவதில்லை | பூசி |
| உயரமுள்ள | தாளுண்ட | பூத்திருக்கும் |
| உழன்று | திரிக்கலாம் | பொறிக்கப்படத்தக்கவை |
| உறங்கிக் | திறந்து | மயங்காதவர் |
| எடுத்துரைக்கும் | தீட்டுவது | மாயும் |
| எய்திய | துடித்தேன் | முற்றியதும் |
| எரிப்பர் | துணையாக | ரசித்தேன் |
| எனச் | தூசாக்கப்படுவதாக | வாரி |
| ஐயமில்லை | தூண்டும் | விடுவர் |
| ஒட்டி | தூற்றக்கூடாது | இல்லந்தோறும் |
| ஒளிர்ந்திட | தெளிவாக | விதைக்கும் |
| கண்டதை | தேய்த்துக் | விருந்தாகும் |
| கவர்ந்த | தொங்கவிடுவதும் | விளக்கேற்றி |
| கவனித்துக் | தொட்டனைத்தூறும் | வீழ்வேன் |
| கழுவப் | தோன்றா | வெளியிட்டார் |
| காகிதமாய் | நரையெய்தி | வெளியேறும் |
| காக்க | நாசப்படுத்தாமல் | வெள்ளிடைமலையாக |
| காட்சியளிக்கும் | நிகழ்ந்திடும் | திருநாளாகக் |
| காப்போம் | நிம்மதியாக | ஆவர் |
| குடிபுகுந்திடும் | நிறுத்தும் | இரா |
| கொடுப்பார்கள் | நிறைந்துள்ளன | முன்னேற |
| கொழிக்கும் | நினைவாக | கார்த்தமாக |
| சமைக்கவும் | நெகிழ்ந்துள்ளார் | |
| | நெஞ்சார | **இடைச்சொல் வகைகள்** |

| |
|---|
| அடுத்து |
| அவ்வப்போது |
| இன்னும் |
| சிறிதும் |
| சிறு |
| பல்வேறு |
| பின் |
| முன் |
| முன்பு |
| ஓர் |
| தொகை/கூட்டுச்சொல் வகைகள் |
| அகல்விளக்கு |
| அடங்காதவர்கள் |
| அப்படிப்பட்ட |
| அறப்பணி |
| அறவாழ்வு |
| ஆத்திச்சூடி |
| ஆரஞ்சுப்பழச்சாறு |
| இணைப்பாட |
| இரவுபகல் |
| இரையென |
| இளஞ்சிவப்பு |
| இளவயதிதிருந்தே |
| உச்சிவெயில் |
| உலகப்புகழ் |
| உவகையுடன் |
| எதிர்காலத்தில் |
| எழுத்தாற்றல் |
| ஐம்பெரும் |
| கடற்கரையோரங்களில் |
| கண்டிப்பானவர் |
| கல்வெட்டுகளும் |
| காய்கறிகளுக்கும் |
| கிருமிநாசினி |
| கொட்டாங்குச்சியைப் |
| சுபகாரியங்கள் |
| சுற்றுப்புறத்தைத் |
| செடிகொடிகளுக்கு |
| சொந்தக்காரர்கள் |
| ஞானக்கண்ணாடி |
| திருநாள் |
| திருவிழா |
| தீந்தமிழ் |
| தொலைக்காட்சியில் |
| நகைச்சுவையாகவும் |
| நெல்வயலுக்கும் |
| பட்டதாரியாக்குவதில் |

| |
|---|
| பலவகையில் |
| பழந்தமிழர்கள் |
| பாடத்திறங்களைப் |
| பிழையின்றியும் |
| புத்தாடை |
| பெருநாவலர் |
| பெருமக்கள் |
| பைந்தமிழ் |
| பொன்னெழுத்துகளால் |
| மகாகவி |
| மணமாலைகள் |
| மாதானுபங்கி |
| மாநிலத்தில் |
| மாவிலையால் |
| மாவீரர் |
| முக்கடல் |
| முதுமொழி |
| முத்தமிழ் |
| முப்பாநூல் |
| முற்றழிவை |
| மெதுபயில் |
| மையக்கருத்து |
| மொழியாற்றல் |
| வாயுரை |
| வெளிப்பாடு |
| வெற்றிலை |
| **தனிச்சொல் வகைகள்** |
| அகத்திய |
| அகரமுதலி |
| அச்சு |
| அடி |
| அடிக்கடி |
| அடுப்பையும் |
| அதற்குத் |
| அதிர்ஷ்டம் |
| அதிவீரராம |
| அப்பொங்கலை |
| அப்போதே |
| அரிசி |
| அவசியம் |
| அவசியம் |
| அழுத்தமும் |
| அள்ளி |
| அறத்தின் |
| அற்புதமான |
| அன்னையின் |
| ஆங்கிலத்தில் |

| |
|---|
| ஆபரணங்களாகத் |
| ஆம் |
| ஆயுளுடன் |
| ஆரோக்கியம் |
| ஆவணி |
| ஆளுமை |
| இச்சிலை |
| இடங்களில் |
| இதழ்கள் |
| இத்தகு |
| இத்தகைய |
| இயலும் |
| இரத்த |
| இராஜ |
| இலட்சியத்துடன் |
| இலத்தின் |
| இவளென |
| இவற்றை |
| இளங்கோவன் |
| இளம் |
| இனங்களிலிருந்து |
| இனிதாவது |
| இனிமையான |
| இன்றளவும் |
| உங்களுக்குத் |
| உணவுகளையே |
| உதாராணத்திற்கு |
| உரங்கள் |
| உலகத்தில் |
| உழவு |
| உஷ்ணமும் |
| எண்ணில் |
| எல்லாம் |
| எல்லாவற்றிற்கும் |
| எளிதில் |
| எறும்பைப் |
| எனது |
| ஏலக்காய் |
| ஐப்பசி |
| ஓசையில் |
| ஓய்வு |
| ஓவியங்களாக |
| கடந்த |
| கடவுள் |
| கதிரவனையும் |
| கம்பர் |
| கயிறு |
| கரிமிளவயை |

| |
|---|
| கருப்பு |
| கலா |
| கனச் |
| கனவுந்தின் |
| காப்பியங்கள் |
| காரணம் |
| கார்த்திகையில் |
| காளமேகப் |
| காளையரும் |
| கான்ஸ்டன்டைன் |
| கீர்த்தனா |
| குடும்பத்தில் |
| குண்டலகேசி |
| குப்பைகளைப் |
| கும்மி |
| குரு |
| குலத்தை |
| குழந்தைகள் |
| கூரை |
| கேமரன்மலையில் |
| கேள்வி |
| கையில் |
| கொடி |
| கொடை |
| கொம்புகளுக்குச் |
| கொழுந்து |
| கொன்றை |
| கோழிச் |
| கோளாறுகள் |
| சக்தியைக் |
| சஞ்சிகைகள் |
| சட்டிச் |
| சந்ததியினர் |
| சமயங்களில் |
| சாயம் |
| சாரணர் |
| சிக்கலை |
| சிக்கனம் |
| சித்திரை |
| சிந்தனை |
| சிந்தாமணி |
| சிரம்பான் |
| சில |
| சிலப்பதிகாரம் |
| சிலையை |
| சிவப்பு |
| சிறுகதைகள் |
| சிறுவர் |

| |
|---|
| சீரகமும் |
| சுகமான |
| சுந்தரர் |
| சுரப்பதைப் |
| சுவையான |
| சுளையும் |
| செடிகளை |
| செரிமான |
| சேதுப்பிள்ளை |
| சோறு |
| டின் |
| தலையாலே |
| தவறு |
| தளிர் |
| தனது |
| தாயோ |
| தான் |
| திடீர் |
| திருமதி |
| தீய |
| தீவுபோல் |
| துடைப்பம் |
| துவைத்தல் |
| துன்பங்களும் |
| தூக்கம் |
| தெருவெங்கும் |
| தென்றல் |
| தேங்காய் |
| தேரோட்டம் |
| தேன் |
| தொகுதிகளையே |
| தொண்டு |
| தொல்காப்பியம் |
| தொல்காப்பியரால் |
| தொல்லை |
| நடவடிக்கையில் |
| நண்பர்பகளையும் |
| நலமுடன் |
| நவீன |
| நாங்கள் |
| நாசி |
| நாரை |
| நாலடியார் |
| நானும் |
| நான்தான் |
| நிறைய |
| நினைவு |
| நீண்ட |

| |
|---|
| நெப்போலியன் |
| நெருப்பில் |
| நோக்கம் |
| நோய்கள் |
| பகவானுக்கு |
| பங்குனியில் |
| பசியை |
| பசேல் |
| பச்சை |
| படத்தில் |
| பதநீர் |
| பந்திங்கில் |
| பலகாரம் |
| பலரும் |
| பாகமும் |
| பாகுபலி |
| பாக்கு |
| பாடல் |
| பாண்டியன் |
| பாபு |
| பாரதிதாசனார் |
| பாரதியார் |
| பிதா |
| பிரச்சினைகளை |
| பிரத்தியேக |
| பிரமித்துப் |
| பிரிவுகள் |
| பிறர்வாட |
| பின்னி |
| புகுதலும் |
| புரட்சிக் |
| புரட்டாசி |
| புராதன |
| புவியில், |
| புள்ளிகளை |
| புறம் |
| பூங்குன்றனார் |
| பூப்பந்து |
| பெகி |
| பெண்கள் |
| பேழையில் |
| பொக்கிஷமாகக் |
| போட்டிகளுக்கு |
| மரத்தை |
| மனப் |
| மாசியில் |
| மாசுகளும் |
| மாதா |

| |
|---|
| மார்கழி |
| முந்தைய |
| முழுமையான |
| முறையாவது |
| முறையே |
| முற்றத்தில் |
| முனிவராலும் |
| மௌலி |
| வசந்தங்களும் |
| வணங்கு |
| வயல்களில் |
| வயிற்றுக் |
| வரவுகள் |
| வருடத்திற்கு |
| வரை |
| வர்ணம் |
| வளம் |
| வாகனங்களைக் |
| வாய்ப்பு |
| விக்கலை |
| விடுதிகளைக் |
| விதமான |
| விதம் |
| வித்தவன் |
| விரதம் |
| விவேக |
| விளக்கம் |
| விஷயங்களையும் |
| வீசும் |
| வீரமாமுனிவர் |
| வெண்பா |
| வெப்பத்தைக் |
| வெப்பம் |
| வெயிலை |
| வெல்லம் |
| வெள்ளம் |
| வெள்ளை |
| வெற்றி |
| ஜனகுமாரி |
| ஜோசப் |

மேற்படி அட்டவணையின்படி, மாணவர்கள் சுமார் 141 சொற்களை ஒரேஒரு முறை பயன்படுதினர் எனக் கண்டோம். தனிச்சொல், கூட்டுச்சொல், தொகைச்சொல், வரிசையில் பெயர், வினை, இடை என அமைந்துள்ளதைக் காண்கின்றோம். அச்சொற்களை குழும அடிப்படையில் வேர்ச்சொல்/அடிச்சொல்லின் மூலத்தின் அடிப்படையில் பிரித்து, அவற்றை மேலும் 2 முதல் எத்துணை முறைகள் மீண்டும் கையாளப்பட்டுள்ளன என்பதனைக் காண முற்பட்ட பொழுது, அச்சொற்களின் பயன்பாடு மேலும் சுருக்கமடைவதைக் காண முடிந்தது. இந்த வகையில் மாணவர்கள் முறையே மொத்தம் 418 சொற்களை மட்டுமே தனித்த முறையில் கையாண்டுள்ளதைக் காண முடிந்தது. கீழ்க்காணும் அட்டவணை இவர்களது மொழியாளுமையினைச் சுருக்கமாகக் காட்டுகின்றது.

| சொற்கள் | எண்ணிக்கை |
|---|---|
| பெயர்ச்சொல் வகை | |
| தனிச்சொற்கள் | 250 |
| கூட்டுச்சொற்கள் | 63 |
| வினைச்சொல் வகை | 95 |
| இடைச்சொல் வகை | 10 |
| உரிச்சொல் வகை | 0 |
| மொத்தம் | 418 |

**மாணவர்களது படைப்புகளில் காணப்படும் இரண்டு முறை பயன்படுத்தப்பட்ட சொற்கள் பட்டியல்**

மேற்படி அட்டவணையில் மாணவர்களது தனிச்சொல் கையாளுமைத் திறன்களைக் கண்டோம், இந்த அட்டவணை அவர்கள் சில குறிப்பிட்ட சொற்களை எவ்வாறு இருநிலைகளில் கையாண்டுள்ளார்கள் என்பதனைக் காணலாம்.

| 133 | 133 |
|---|---|
| அணிந்து | அணிந்து, அணைக்காவிட்டாலும் |
| ஆகும் | ஆகாத, ஆகும் |
| எடு | எடுக்க, எடுத்த, |
| எடுத்துக்காட்டாக | எடுத்துக்காட்டாக, எடுத்துக்காட்டாகக், |
| எனப் | எனப், எனப்படும் |
| கடமையாகும் | கடமையாகும் |
| குளி | குளித்துப், குளிப்பாட்டி, |
| சமமாகும் | சமமாகும், சமம் |
| சுவாசி | சுவாசிப்பது, சுவாசிப்பாகும் |
| தேடி | தேடி |
| பற்று | பற்றுணரும், பற்றுண்ட |
| மங்களமாகிடும் | மங்களமாகிடும், மங்களம் |
| முடியும் | முடியும், முடைய (உடைய) |
| வழங்குகின்றன | வழங்குகிறது, வழங்குகின்றன |
| வாய்ந்த | வாய்ந்த, வாய்ந்ததாக |
| விளை | விளை, விளையாடுவது |
| பெய் | பெய்கிறது, பெய்கையில் |
| செய் | செய்து, பலசெய்து |
| படை | படைக்க, படைத்து |
| மதி | மதித்து |

| | |
|---|---|
| இரசிக்க, இரசித்து | இரசிக்க, இரசித்து |
| ஈர்த்துக் | ஈர்த்துக் |
| ஈர்த்துக், ஈர்ப்பு | ஈர்த்துக், ஈர்ப்பு |
| உறுதியாகக் | உறுதியாகக் |
| உறுதியாகக், உற்பத்தி | உறுதியாகக், உற்பத்தி |
| | |
| ஆகிய | ஆகிய, ஆகியவற்றை |
| ஆனால் | ஆனால், ஆனியில் |
| இங்கு | இங்கு |
| மீது | மீதிலான, மீது |
| பல | பல |
| | |
| ஊரெல்லாம் | ஊரெங்கும், ஊரெல்லாம் |
| சொற்களஞ்சியம் | சொற்களஞ்சியத்தைப், சொற்களஞ்சியம் |
| நூற்றாண்டு | நூற்றாண்டுகளுக்கு, நூற்றாண்டுக்கும் |
| பொய்யாமொழி | பொய்யாமொழி, பொய்யாமொழிப் |
| மணற்கேணி | மணற்கேணி, மணற்பாங்கான |
| மனமகிழ்ச்சி | மனமகிழ்ச்சி, மனமகிழ்வு |
| | |
| அக்கறை | அக்கறை, அக்கறையும் |
| அடி | அடியார்களாலும், அடியேன் |
| அடி | அடி, அடிகளால் |
| அடிப்படை | அடிப்படையாகத், அடிப்பபடையாக |
| அடுக்கிக் | அடுக்கிக், அடுக்கினார்கள் |
| அட்டையைக் | அட்டையைக் |
| அமுதம் | அமுதமான, அமுதென்று |
| அரசாங்கம் | அரசாங்கம், அரசு |
| அவசியம் | அவசியம் |
| அறிஞர் | அறிஞர்களாலும், அறிஞர்களில் |
| ஆசான் | ஆசான், ஆசானையே |
| ஆடி | ஆடிப்பட்டம், ஆடியில் |
| ஆண்டு | ஆண்டுகளுக்குத, ஆண்டுக்கும் |
| ஆர்வம் | ஆர்வத்துடன், ஆர்வம் |
| ஆற்றல் | ஆற்றலைப், ஆற்றல், |
| இஞ்சியால் | இஞ்சியால், இஞ்சியை |
| இதற்கு | இதற்கு, இதற்குப் |
| இப் பண்டிகைக்கு | இப் பண்டிகைக்கு, இப் பொழுது |
| இவ் அளவு | இவ் அளவு, இவ் விழா |
| எங்கு | எங்குச், எங்கும் |
| எடை | எடை, எடையும் |
| எலுமிச்சைச் | எலுமிச்சைச், |
| ஒன்று | ஒன்று ஒன்றே |
| ஓடைகள் | ஓடைகள், ஓட்டம் |
| கல்வி | கல்வி, கல்வித்தெய்வமாகும் |

| | |
|---|---|
| காலம் | காலத்தில், காலத்திலே காலத்திற்கு |
| கிணறு | கிணற்று, கிணற்றுத் |
| குடி | குடிநீராக, குடிநீர், |
| குறள் | குறள், குறள்களை, |
| கொடை | கொடை |
| கொழுப்பு | கொழுப்பு, கொழுப்புகளை |
| சான்றோர் | சான்றோர், சான்றோறார் |
| சீர் | சீராகும், சீராக்கும் |
| சுலபம் | சுலபமா, சுலபமாக, |
| சூடு | சூடிட, சூடிடும் |
| சூரியன் | சூரிய, சூரியனை, |
| சேமி | சேமிக்கலாம், சேமித்து, |
| தகவல்களை | தகவல்களை, தகவல்களையும் |
| தடிப்பான | தடிப்பான, தடைகள் |
| தத்துவம் | ததைப், தத்துவத்தை |
| தவளைபோல் | தவளைபோல், தவளையாகி |
| தனலெட்சுமி | தனலெட்சுமி |
| த<br>னி | தனி, தனித்து, |
| தன் | தன், தன்மை |
| தாய்மொழி | தாய்மொழி, தாய்மொழியாம் |
| திருச்சி | திருச்சிக்கு, திருச்சியை |
| தினம் | தினந்தின்று, தினமும் |
| | |
| துணி | துணிகளை, துணிகளைத் |
| தூய/ய் | தூயத், தூய்மைப்படுத்துவோம் |
| தொழில் | தொழில், தொழில்நுட்ப |
| தொன்மையான | தொன்மையான, தொன்மையானது, |
| தோண்டு | தோண்ட, தோண்டத் |
| தோரணம் | தோரணமாகத், தோரணம் |
| நடப்புகளையும் | நடப்புகளையும் |
| நடுக்கம் | நடுக்கம், நடுவோம் |
| நாடு | நாட்டில், நாட்டு, |
| நாம் | நாமும், நாம், |
| நாவல் | நாவல், நாவல்கள் |
| நாள் | நாட்களாக, நாட்களுக்குக் |
| நான் | நானும், நான் |
| நான்கு | நான்காயிரம், நான்கு |
| நிறம் | நிறத்தில், நிறம், |
| நுட்பம் | நுட்பமும், நுட்பம் |
| பணமும் | பணமும், பணம் |
| பதிப்பகத்தில் | பதிப்பகத்தில், பதில் |
| பாரில் | பாரிலுள்ள, பாரினில், |
| பாலம் | பாலங்களை, பாலாமோ |
| பானை | பானையில், பானையையும், |

| | |
|---|---|
| பூமி | பூமியின், பூமியைப் |
| பேண் | பேணிக், பேணுவோம் |
| பொது | பொது, பொதுமறை |
| பொழுது | பொழுது, பொழுதுபோக்கு, |
| போகி | போகி,போகிபண்டிகை |
| மஞ்சலைப் | மஞ்சலைப், மஞ்சள் |
| மணி | மணி, மணிமேகலை |
| மதுரை | மதுரையில் |
| மரம் | மரம் |
| மனம் | மனம் |
| மாதம் | மாத, மாதத்தில் |
| மாந்தர் | மாந்தரின், மாந்தர்க்குக் |
| முகாம் | முகாமிற்கு, முகாம்களை |
| மூத்த | மூத்த, மூத்தமொழி, |
| மூலம் | மூலக்காரணமான, மூலம் |
| மூன்று | மூன்றாவது, மூன்று |
| வடிவம் | வடிவமாக, வடிவியலும் |
| விலங்குகள் | விலங்குகள்,விலங்குகளின் |
| வைபவம், வைபோகம் | வைபவங்களிலும், வைபோகம் |
| பண்டிகை | பண்டிகைகளில், பண்டிகையின் |
| பண்டிதன் | பண்டிதனாக, பண்டிதன் |
| வகை | வகைகளில், வகையில் |

மேற்படி அட்டவணையின்படி மாணவர்கள் சுமார் 125 சொற்களை இருமுறை பயன்படுத்தி உள்ளனர். அச்சொற்களை குழும அடிப்படையில் வேர்ச்சொல்/அடிச்சொல்லின் மூலத்தின் அடிப்படையில் பிரித்து, அவற்றை மேலும் 2 முறையாக எத்துணை முறைகள் மீண்டும் கையாளப்பட்டுள்ளன என்பதனைக் காண முற்பட்டபொழுது, அச்சொற்களின் பயன்பாடு மேலும் சுருக்கமடைவதைக் காண முடிந்தது. இந்த வகையில் மாணவர்கள் முறையே மொத்தம் 245 சொற்களை மட்டுமே இருமுறைகளாகக் கையாண்ட திறத்தினைக் காண முடிகின்றது.

**மாணவர்களது படைப்புகளில் காணப்படும் மூன்று முறை பயன்படுத்தப்பட்ட சொற்கள் பட்டியல்**

| | |
|---|---|
| 1இயக்கினார் | இயக்கினார், இயக்குநர், இயக்குனர் |
| 1இயற்று | இயற்றப்பட்ட, இயற்றி, இயற்றியவர் |
| 1காட்டு | காட்டுகிறது, காட்டும், காட்டுவேன் |
| 1குறிப்பிடு | குறிப்பிடத்தக்கது, குறிப்பிடப்படுகிறது, குறிப்பிடவில்லை |
| 1ஊற்று | ஊற்று, ஊற்றவும், ஊற்றி |
| 1புரி | புரிந்து, புரியவில்லையென்றால், புரியும் |
| 1விளக்கு | விளக்கு |
| 1சங்கமிக்கும் | சங்கமிக்கும், சங்கம், சங்கிலி |
| 1தந்து | தந்து, தந்துள்ளார், தந்தை |
| 1தெரி | தெரிகிறதா, தெரிந்து, தெரியாதப், |
| 1பிடி | பிடிக்கும், பிடித்த, பிடித்துவிட்டது |
| 1போதி | போதிக்கின்றார், போதிக்கும், போதிப்பார், |

| | |
|---|---|
| 1வாங்கு | வாங்கவில்லை, வாங்கித், வாங்கினார் |
| 1விரும்பு | விரும்பி, விரும்புகிறேன், விரும்புபவனாக |
| | |
| 2கழுவு | கழித்தலும், கழுவுதல் |
| 2அவற்றில் | அவற்றில், அவற்றிற், அவற்றுக்குச் |
| 2பெரிய | பெரிதும், பெரியார், பெரியோர்வரை |
| 2மேல் | மேலாகத், மேலும், மேற்கொள்ள |
| 5உயிர்வளி | உயிர்வளியின், உயிர்வளியை, உயிர்வளியையும் |
| 5எப்பொழுதும் | எப்பொழுது, எப்பொழுதும் |
| | |
| அடை | அடை, அடையும் அடைகிறேன் |
| அது | அது, அதுமட்டுமா, அதுமட்டுமின்றி, |
| அதை | அதை, அதைக், அத்தகைய |
| ஆய்வாளர் | ஆயாவார், ஆய்வாளர்கள் |
| உணர | உணர, உணர்த்துகின்றன, உணர்ந்த |
| என் | என்னைக், என்னைத், என்னையும் |
| ஒன்றாக | ஒன்றாக, ஒன்றாகும், , ஒன்றுகூடி |
| ஓலை | ஓலைகளை, ஓலையைக், ஓலையைச் |
| குளிர்மை | குளிரில், குளிர்ச்சியாகவும், குளிர்மையான |
| சதுரகராதியை | சதுரகராதியை, சதுரங்கம், சதுரத்தில் |
| சார் | சாரும், சார்ந்த, சார்ந்தது |
| சுத்தம் | சுத்தமாகப், சுத்தமான, சுத்தம், |
| தங்கச் | தங்கச், தங்கள், தங்கும் |
| தயார் | தயாரானவுடன், தயாரிக்கப்பட்டேன், தயாரித்தார்கள் |
| தாவரம் | தாவரங்களின், தாவரங்களும், தாவரங்களையும் |
| திருமணம் | திருமண, திருமணமாகி, திருமணம், |
| தொடர் | தொடர, தொடர்ந்து, தொடர்பு, |
| நிலம் | நில, நிலச்சரிவு, நிலவறட்சி |
| நிலை | நிலைக்கலன், நிலைநாட்ட, நிலையத்திற்குச், |
| நீங்கு | நீக்கும், நீங்கி, நீங்கும் |
| நேரம் | நேரத்திலும், நேரத்தில், நேரத்திற்குப் |
| நேர் | நேர், நேரிடும், நேரில், |
| படம் | படமாக, படமாகத், படம் |
| பயிற்சிகளைக் | பயில்கிறேன், பயிற்சிகளைக், பயிற்சிகளைச் |
| பருவத்தையும் | பருவத்தையும், பருவம் |
| பழக்கம் | பழக்கத்தை, பழக்கத்தைச், பழக்கம் |
| பழுப்பு | பழுப்பு, பழைய, பழையன |
| பள்ளிக்கு | பள்ளிக்கு, பள்ளியின் |
| பற்றி | பற்றி, பற்றும், பற்றை |
| பால் | பாலெல்லாம், பாலைக்கொண்டு, பால், |
| பிள்ளை | பிள்ளை, பிள்ளைகளைப், 'பிள்ளையைப், |
| | |
| போல் | போலவே, போலாகும், போல் |
| மனதை | மனதே, மனதை |
| மாற்று | மாற்றக், மாற்றிக், மாற்றிய |

| | |
|---|---|
| மூலிகை | மூலிகைகளை, மூலிகைகளைப், மூலிகைகள் |
| மெல் | மெல்லிய, மெல்லினத்தைச், மெல்லினம் |
| ராஜம் | ராஜம், ரூபாய், ரோஜாவில் |
| வண்ணம் | வண்ண, வண்ணக், வண்ணம் |
| வயது | வயதிலிருந்தே, வயது |
| வளையாபதி | வளையாபதி, வள்ளுவம், வள்ளுவர் |
| வாசல் | வாசலில், வாசலில், வாசல்களில் |
| விவசாயம் | விவசாயம், விவசாயிகளுக்கு, விவசாயிகள் |
| விழாக்கள் | விழாக்கள், விழாக்காலங்களிலும், விழாவாகும் |

மேற்படி அட்டவணையின்படி, மாணவர்கள் சுமார் 122 சொற்களை இருமுறை பயன்படுத்தி உள்ளனர். அச்சொற்களை குழும அடிப்படையில் வேர்ச்சொல்/அடிச்சொல்லின் மூலத்தின் அடிப்படையில் பிரித்து, அவற்றை மேலும் 2 முறையாக எத்துணை முறைகள் மீண்டும் கையாளப்பட்டுள்ளன என்பதனைக் காண முற்பட்டபொழுது, அச்சொற்களின் பயன்பாடு மேலும் சுருக்கமடைவதைக் காண முடிந்தது. இந்த வகையில் மாணவர்கள் முறையே மொத்தம் 366 சொற்களை மட்டுமே இருமுறைகளாகக் கையாண்ட திறத்தினைக் காண முடிகின்றது.

**மாணவர்களது படைப்புகளில் காணப்படும் நான்கு முறை பயன்படுத்தப்பட்ட சொற்கள் பட்டியல்**

| | |
|---|---|
| 1அடி | அடிப்பார்கள், அடிக்கப்பட்டிருந்தது, அடித்து, அடிப்பார்கள் |
| 1உயர்த்திக் | உயர்த்திக், உயர்த்திப், உயர்த்துவேன், உயர்ந்து |
| கண்டி | கண்டிப்பாக, கண்டிப்பார், கண்டிப்புடன் |
| காண் | காணும், காணோம், காண்கிறோம், காப்பது, |
| கூடு | கூடாது, கூடியவர், கூடும், கூட்டும், |
| கேள் | கேட்கும், கேட்டாலும், கேட்போம், கேமரன் |
| கொண்டாடு | கொண்டாடப்படுகிறது, கொண்டாடப்படுகின்றது, கொண்டாடப்படும், கொண்டாடுவார்கள் |
| கொள் | கொள்வது, கொள்வார், கொள்ள, கொள்ளலாம் |
| சரிவதில்லை | சரிவதில்லை, சரிவு, சருகு, சருமத்தின் |
| செல் | செல்ல, செல்லும், சென்றார், சென்று |
| தருகின்றன | தருகிறது, தருகின்றன, தரும், தருவேன் |
| நடத்துவேன் | நடத்தி, நடத்துவார், நடத்துவேன் |
| படி | படிக்க, படிக்கப், படிக்கும், படித்துப், |
| வரும் | வருங்கால, வரும், வருகிறது, வருகின்றன |
| அறி | அறிந்த, அறிந்ததே, அறிந்து, அறிந்துகொள்ள |
| | |
| 2ஓர் | ஓர் |
| 2போது | போது, போதும், போப், போல, |
| 2போன்ற | போன்ற, போன்றவர்களின், போன்றவர்கள், போன்றவற்றை, |
| | |
| அளவு | அளவாவது, அளவில், அளவு, அளவுபெருகும் |
| அறிவு | அறிவு, அறிவுகண்களையும், அறிவுக், அறிவாளியாக்குவதால் |
| இரண்டா | இரண்டா, இரண்டாம், இரண்டு, இரண்டையும் |
| இளநீர் | இளநீர், இளநீர்' |

| | |
|---|---|
| உடல் | உடலில், உடலின், உடல் |
| ஏழை | ஏழை, ஏழைகளுக்கு |
| கல்/கல் | கல், கல்க்காத, கல்தோன்றி, கல்லறையில் |
| காற்று | காற்று, காற்றுமண்டலத்தில், காற்றும், காற்றையும் |
| கோலம் | கோலங்களும், கோலமிட்டு, கோலம், கோலாகலமாகும் |
| திருவள்ளுவர் | திருவள்ளுவரும், திருவள்ளுவரே, திருவள்ளுவரைத், திருவள்ளுவர் |
| தென்னை | தென்னை, தென்னையிலிருந்து, தென்னையின், தென்னையைப் |
| தை | தைப், தைப்பிறந்தால், தைப்பொங்கல், தைமாதத்தின் |
| நமது | நமது |
| பக்கம் | பக்க, பக்கம், பக்குவத்தைப், பக்குவப்படுத்த |
| பழமை | பழமை, பழமையான, பழம் |
| புது | புதிய, புதியன, புது, புதுப்புனல், |
| மட்டுமின்றி | மட்டுமின்றி, மட்டுமே |
| மரியாதை | மரியாதையுடனும், மரியாதையும், மருத்துவ, மருந்தாகக் |
| மறும் | மறுநாள், மற்ற, மற்றும் |
| முதல் | முதல், முதல்பக்க, முதற்சங்கம், முதற்பாவலர், |
| வரி | வரிகளில், வரிகளுக்கேற்ப, வரிசையில், வரிவடிவத்துடன் |

மேற்படி அட்டவணையின்படி மாணவர்கள் சுமார் 39 சொற்கள், 178 சொற்களாக திரிப்பாக்கம் கண்டுள்ளன. அச்சொற்களை குழும அடிப்படையில் வேர்ச்சொல்/அடிச்சொல்லின் மூலத்தின் அடிப்படையில் பிரித்து, அவற்றை மேலும் 3 முறையாக எத்துணை முறைகள் மீண்டும் கையாளப்பட்டுள்ளன என்பதனைக் காண முற்பட்டபொழுது, அச்சொற்களின் பயன்பாடு மேலும் சுருக்கமடைவதைக் காண முடிந்தது. இந்த வகையில் மாணவர்கள் முறையே மொத்தம் 39 சொற்களை மட்டுமே இருமுறைகளாகக் கையாண்ட திறத்தினைக் காண முடிகின்றது.

**மாணவர்களது படைப்புகளில் காணப்படும் ஐந்து முறை பயன்படுத்தப்பட்ட சொற்கள் பட்டியல்**

| | |
|---|---|
| எண்ணி | எண்ணி, எண்ணிலடங்கா, எண்ணினார் |
| தவிர்த்து | தவிர்க்கப், தவிர்க்கலாம், தவிர்த்து |
| தோன்று | தோன்றி, தோன்றிய, தோன்றியதாகும், தோன்றியது, தோன்றும் |
| பாதுகாப்பு | பாதுகாக்கின்றன, பாதுகாப்பாக, பாதுகாப்போமாக, பாதுகாப்போம் |
| பெருக | பெருக, பெருகத், பெருகினால், பெருகும், பெருக்கிக் |
| போற்று | போற்றப்பட்டது, போற்றி, போற்றிப், போற்றுவேன், போற்றுவோம் |
| வசிக்கின்றன | வசிக்கிறார், வசிக்கின்றன, வசிக்கும், வசிப்பிடமாய், வசிப்பிடமாய்த் |
| வந்தடைந்தோம் | வந்தடைந்தோம், வந்ததும், வந்தார், வந்திடும், வந்து |
| வலியுறுத்துவார் | வலியுறுத்துவார், |
| கொடு | கொடுக்கப்பட்டுள்ளது, கொடுக்கும், கொடுங்கூற்றுக்கு, கொடுத்து, கொடுப்பார் |
| | |
| ஒவ்வொரு | ஒவ்வொரு, ஒவ்வொருவரின் |
| | |
| இடைச்சங்கம் | இடைச்சங்கம், இடையினத்தைச், இடையினமாகும், இடையினம் |
| | |
| அவை | அவை |
| இவரே | இவரே, இவரை, இவரைத், இவரைப், இவர்கள் |
| ஒரு | ஒரு, ஒருங்கே, ஒருமுகப்படுத்தி, ஒருவர், ஒரே |

| | |
|---|---|
| கண் | கண்கண்ட, கண்களாய்த், கண்களைத், கண்கூடாகக், கண்ணாடிப், கண்ணீர் |
| கன்னிப் | கனினிடை, கன்யாகுமரியில், கன்னிப், கன்னியரும் |
| குறை | குறைகளைத், குறைகிறது, குறைக்கலாம், குறைந்தது, குறையும், குறைவு, |
| செம்மை | செந்தமிழ், செந்போதர், செம்மைப்படும்,<br>செம்மையான, செம்மொழி, |
| திறமை | திறமையாக, திறனும், திறனை, திறனைக், திறன் |
| நம் | நம், நம்மால், நம்மிடம், நம்முடைய, நம்மை |
| புகழ் | புகழுக்கு, புகழும், புகழையும், புகழ்வாய்ந்தவர்கள் |
| புலமை | புலப்படுகிறது, புலமை, புலவர் |
| பெருமை | பெருமிதம், பெருமை, பெருமைப்பட, பெருமையுடன், பெரும் |
| பேர் | பேர், பேரிடர், பேரிடர்களைத், பேரிடர்கள், பேரும் |
| மரங்கள் | மரங்கள, மரங்களால், மரங்களின், மரங்கள் |
| மலையில் | மலேசியர்கள், மலைத்தேன், மலையில் |
| மழை | மழை |
| மனிதனுக்குத் | மனிதர்களின், மனிதர்களுக்குக், மனிதர்களுக்கும், மனிதர்கள், மனிதனுக்குத் |
| மிருகம் | மிருகங்கள், மிருகங்களும், மிருகங்களையும், மிருகங்கள், மிருகம், |
| வல் | வல்லினத்தைச், வல்லினம் |

மேற்படி அட்டவணையின்படி மாணவர்கள் சுமார் 33 சொற்கள், 194 சொற்களாக திரிப்பாக்கம் கண்டுள்ளன. அச்சொற்களை குழும அடிப்படையில் வேர்ச்சொல்/அடிச்சொல்லின் மூலத்தின் அடிப்படையில் பிரித்து, அவற்றை மேலும் 4 முறையாக எத்துணை முறைகள் மீண்டும் கையாளப்பட்டுள்ளன என்பதனைக் காண முற்பட்டபொழுது, அச்சொற்களின் பயன்பாடு மேலும் சுருக்கமடைவதைக் காண முடிந்தது. இந்த வகையில் மாணவர்கள் முறையே மொத்தம் 33 சொற்களை மட்டுமே இருமுறைகளாகக் கையாண்ட திறத்தினைக் காண முடிகின்றது.

**மாணவர்களது படைப்புகளில் காணப்படும் ஆறு முறை பயன்படுத்தப்பட்ட சொற்கள் பட்டியல்**

| | |
|---|---|
| உதவும் | உதவி, உதவிடும், உதவுகின்றது, உதவுகின்றன, உதவும் |
| திகழ் | திகழ, திகழ்கிறது, திகழ்கின்றன, திகழ்ந்தது, திகழ்ந்தவர்கள், திகழ்பவை |
| பேசு | பேசக், பேசப்படுகின்றன, பேசி, பேசிப், பேச்சாற்றலும், பேச்சுத் |
| | |
| அந்த | அந்த, அந்தத், அந்தப் |
| இந்த | இந்த, இந்தப், இந்திய, இந்நாள் |
| உரிய | உரிய, உருவ, உருவத்தையும், உருவம், உருவாக்கி, உரை |
| பிற | பிற, பிறகு, பிறக்கும், பிறந்ததில், பிறந்தார், பிறந்தால் |
| | |
| அதன் | அதனால், அதனை, அதனைத், அதனைப், அதன் |
| இலக்கண | இலக்கண, இலக்கணத்தில், இலக்கணமும், இலக்கணம், இலக்கியத்தில், இலக்கியமும் |
| உணவு | உணவு, உணவுச், உணவும், உணவை, உணவைப் |
| தணிக்க | தணிக்க, தணிக்கப்படுகிறது, தணியும், தண்டைக், தண்ணீரை, தண்ணீர்விட்டு |
| தெய்வம் | தெய்வத்திற்குச், தெய்வத்தை, தெய்வநூல், தெய்வப்புலவர், தெய்வமாகக், தெய்வம் |
| தேவை | தேவைகள், தேவைக்குப், தேவைப்படு, தேவையற்ற, தேவையான, தேவையானது |
| நாள் | நாள், நாளிதழ்கள், நாளும், நாளேடுகளை, நாளேடுகளையும், |
| நூல் | நூலாகக், நூலெல்லாம், நூல், நூல்களில், நூல்களும், நூல்களை |
| பாடம் | பாட, பாடங்களை, பாடங்களைப், பாடங்கள், பாடத்தின், பாடம் |

| | |
|---|---|
| பொருள் | பொருட்களால், பொருட்களைச், பொருட்களைப், பொருளில், பொருளின், பொருள், |
| மாடு | மாடுகளுக்கு, மாடுகளைக், மாடுகளையும், மாட்டுக்கு, மாட்டுப், மாட்டுப்பொங்கல் |
| யார் | யாடுவது, யாமறிந்த, யாரும், யாரென்றால், யார் |

மேற்படி அட்டவணையின்படி மாணவர்கள் சுமார் 19 சொற்கள், 123 சொற்களாக திரிப்பாக்கம் கண்டுள்ளன. அச்சொற்களை குழும அடிப்படையில் வேர்ச்சொல்/அடிச்சொல்லின் மூலத்தின் அடிப்படையில் பிரித்து, அவற்றை மேலும் 6 முறையாக எத்துணை முறைகள் மீண்டும் கையாளப்பட்டுள்ளன என்பதனைக் காண முற்பட்டபொழுது, அச்சொற்களின் பயன்பாடு மேலும் சுருக்கமடைவதைக் காண முடிந்தது. இந்த வகையில் மாணவர்கள் முறையே மொத்தம் 19 சொற்களை மட்டுமே இருமுறைகளாகக் கையாண்ட திறத்தினைக் காண முடிகின்றது.

**மாணவர்களது படைப்புகளில் காணப்படும் ஏழு முறை பயன்படுத்தப்பட்ட சொற்கள் பட்டியல்**

| | |
|---|---|
| அழை | அழைக்கலாம், அழைக்கிறோம், அழைக்கின்றோம், அழைத்த, அழைத்து,<br>அழைத்துச், அழைப்பர் |
| ஆவார் | ஆவார், ஆவான், ஆவேன் |
| உள்ள | உள்ள, உள்ளடக்கியது, உள்ளது, உள்ளவர், உள்ளவர்களாக, உள்ளன |
| கருதப்படுகிறது | கருத, கருதப்படுகிறது, கருதப்படுவது, கருதி, |
| பழகு | பழகுவார், பழக்கமாகும் |
| பார் | பார்க்க, பார்க்காமல், பார்த்தார், பார்த்து, பார்த்துக், பார்த்தேன், பார்ப்பதற்கு |
| வை | வைக்கும், வைத்த, வைத்து, வைத்துக்,<br>வைப்பர், வைப்பார், வைப்பார்கள் |
| | |
| இறுதியில் | இறுதியில் |
| இறை | இறை, இறைவனாகும், இறைவனாவான், இறைவனுக்கு, இறைவனை, இறைவன் |
| உலக | உலக, உலகிலே, உலகிற்கே, உலகின் |
| கவிஞர் | கவிஞர் |
| கவிதை | கவிதை, கவிதைகளையும், கவிதைகள் |
| நல்ல | நல்ல, நல்லவர், நல்லாரின், நல்வரவும் |
| நீர் | நீரில், நீரை, நீரைச், நீரைதான், நீரைப், நீர், நீர்பாய்ச்ச |
| புத்தகம் | புத்தகக்கடையில், புத்தகங்களாகப், புத்தகங்களை, புத்தகங்கள், புத்தகங்ளை,<br>புத்தகத்தை, புத்தகப், புத்தகம் |
| மண் | மண், மண்சரிவு, மண்தோன்றா<br>மண்டலத்திலுள்ள |
| மிக | மிக, மிகச், மிகத், மிகவும், மிகவும், மிகையாகாது, மிக்க |

மேற்படி அட்டவணையின்படி மாணவர்கள் சுமார் 17 சொற்கள், 121 சொற்களாக திரிப்பாக்கம் கண்டுள்ளன. அச்சொற்களை குழும அடிப்படையில் வேர்ச்சொல்/அடிச்சொல்லின் மூலத்தின் அடிப்படையில் பிரித்து, அவற்றை மேலும் 6 முறையாக எத்துணை முறைகள் மீண்டும் கையாளப்பட்டுள்ளன என்பதனைக் காண முற்பட்டபொழுது, அச்சொற்களின் பயன்பாடு மேலும் சுருக்கமடைவதைக் காண முடிந்தது. இந்த வகையில் மாணவர்கள் முறையே மொத்தம் 19 சொற்களை மட்டுமே இருமுறைகளாகக் கையாண்ட திறத்தினைக் காண முடிகின்றது.

**மாணவர்களது படைப்புகளில் காணப்படும் எட்டுமுறை பயன்படுத்தப்பட்ட சொற்கள் பட்டியல்**

| | |
|---|---|
| உண்டு | உண்டு, உண்பதால், உண்பார் |
| ஏற்படும் | ஏறிய,<br>ஏற்படாவகையில், ஏற்படுகின்றன, ஏற்படும், ஏற்படுவதைக், ஏற்றுமதி |
| கொண்டார் | கொண்டார், கொண்டிருக்கிறான், கொண்டிருக்கும்போது, கொண்டு, கொண்ட, கொண்டவர்,<br>கொண்டுள்ளன, கொண்டே, |
| போ | போகலாம், போகிக்கிறார், போக்காகவும், போக்கு, போடக், போடுவார்கள், போய்விடும் போனார், |
| | |
| இனிமை | இனிப்பாகவும், இனிமை, இனிமையான, இனிமையின், இனிமையை, இனிய, இன்பத்தமிழ், இன்பவாழ்வு |
| உண்டி | உண்டியலை |
| திரு | திரு, திருக்கும், திருக்குறள்கள், திருக்குறளின், திருக்குறளும், திருக்குறளை, திருக்குறளைப், திருக்குறள், |
| பணி | பணி, பணியாகும், பணிவாகவும், |
| பண் | பண்பாடாகும் |
| பெயர் | பெயரில், பெயரை, பெயரைக், பெயரைச், பெயரையே, பெயர், பெயர்கள், பெயர்த்தவரும்,<br>பெற, பெறலாம், பெறுவதற்கு, பெற்ற, பெற்றால், பெற்றுத், பெற்றோருக்கு, பெற்றோர்கள் |
| மாணவர் | மாணவராகிய, மாணவர்களாகிய, மாணவர்களாக்குவேன், மாணவர்களின், மாணவர்களுக்கு, மாணவர்களுக்குத், மாணவர்களுக்குப், மாணவர்களை, மாணவர்களைச், மாணவர்களைப், மாணவர்கள், மாணவனின் |
| வீடு | வீடுகளுக்கு, வீட்டில், வீட்டிற்கு, வீட்டிற்குக், வீட்டுக்கு, வீட்டுப், வீட்டைக், வீட்டைச் |
| வகுப்பு | வகுப்பாசிரியரும், வகுப்பாசிரியர், வகுப்பினருக்கும், வகுப்பு |

மேற்படி அட்டவணையின்படி மாணவர்கள் சுமார் 13 சொற்கள், 116 சொற்களாக திரிப்பாக்கம் கண்டுள்ளன. அச்சொற்களை குமும அடிப்படையில் வேர்ச்சொல்/அடிச்சொல்லின் மூலத்தின் அடிப்படையில் பிரித்து, அவற்றை மேலும் 6 முறையாக எத்துணை முறைகள் மீண்டும் கையாளப்பட்டுள்ளன என்பதனைக் காண முற்பட்டபொழுது, அச்சொற்களின் பயன்பாடு மேலும் சுருக்கமடைவதைக் காண முடிந்தது. இந்த வகையில் மாணவர்கள் முறையே மொத்தம் 13 சொற்களை மட்டுமே இருமுறைகளாகக் கையாண்ட திறத்தினைக் காண முடிகின்றது.

| சொற்கள் | எண்ணிக்கை |
|---|---|
| தனிச்சொற்கள் | 116 |
| கூட்டுச்சொற்கள் | 0 |
| பெயர்ச்சொல் வகை | 91 |
| வினைச்சொல் வகை | 25 |
| இடைச்சொல் வகை | 0 |
| உரிச்சொல் வகை | 0 |
| எண்ணிக்கைச் சொல் | 0 |
| மொத்தம் | 116 |

**மாணவர்களது படைப்புகளில் காணப்படும் ஒன்பதுமுறை பயன்படுத்தப்பட்ட சொற்கள் பட்டியல்**

| | |
|---|---|
| அமை | அமைகிறது, அமைகின்றன, அமைக்கலாம், அமைதியாகவும், அமைத்து, அமைத்துள்ளது, அமைந்துள்ளது, அமைப்பு, அமைவேன் |
| கற்றுக் | கற்க, கற்பித்தலை, கற்றல், கற்றனைத்தூறும், கற்றுக், கற்றுக்கொடுக்கும், கற்றுக்கொடுப்பார் |
| கிடைக்க | கிடைக்கப்பெற்று, கிடைக்காது, கிடைக்கிறது, கிடைக்கின்றது, கிடைக்கின்றன, கிடைக்கும், கிடைத்த, கிடைத்தது, கிடையாது |
| அழகான | அழகாக, அழகாகக், அழகாகப், அழகான, அழகு, அழகுக்கு, அழகுச், அழகுபடுத்துவர் |
| ஆறு | ஆற்றிலிலே, ஆறு, ஆறுகளில்,<br>ஆற்றிலிருந்து, ஆற்றினால், ஆற்று, ஆற்றுநீரைக், ஆற்றுநீரைச், ஆற்றுநீரைத்தான் |
| இது | இதில், இது, இதுதான், இதுவரையில், இதை, |
| எங்கள் | எங்களின், எங்களுக்கு, எங்களுக்குத், எங்களுக்குப், எங்களுடைய, எங்களை, எங்களைக், எங்களைத், எங்கள் |
| என் | எனக்கு, எனக்குத், எனக்குப், எனக்கும் |
| பொங்கல் | பொங்கலன்று, பொங்கலிடுவர், பொங்கலுக்கு, பொங்கலை, பொங்கலைக், பொங்கலைச், பொங்கல், பொங்கல்', பொங்கிடும், |
| வழி | வழி, வழிகளில், வழிகாட்டி, வழிகாட்டியாக, வழிபடுவார்கள், வழிபாடு, வழியில் |

மேற்படி அட்டவணையின்படி, மாணவர்கள் சுமார் 10 சொற்கள், 86 சொற்களாக திரிப்பாக்கம் கண்டுள்ளன. அச்சொற்களை குழும அடிப்படையில் வேர்ச்சொல்/அடிச்சொல்லின் மூலத்தின் அடிப்படையில் பிரித்து, அவற்றை மேலும் 9 முறையாக எத்துணை முறைகள் மீண்டும் கையாளப்பட்டுள்ளன என்பதனைக் காண முற்பட்டபொழுது, அச்சொற்களின் பயன்பாடு மேலும் சுருக்கமடைவதைக் காண முடிந்தது. இந்த வகையில் மாணவர்கள் முறையே மொத்தம் 10 சொற்களை மட்டுமே இருமுறைகளாகக் கையாண்ட திறத்தினைக் காண முடிகின்றது.

| சொற்கள் | எண்ணிக்கை |
|---|---|
| பெயர்ச்சொல் வகை | 61 |
| வினைச்சொல் வகை | 25 |
| இடைச்சொல் வகை | 0 |
| உரிச்சொல் வகை | 0 |
| எண்ணிக்கைச் சொல் | 0 |
| மொத்தம் | 86 |

**மாணவர்களது படைப்புகளில் காணப்படும் பத்துமுறை பயன்படுத்தப்பட்ட சொற்கள் பட்டியல்**

| | |
|---|---|
| அழி | அழிக்க, அழிக்கப்பட்டால், அழிக்காமல், அழிக்கின்றோம், அழித்தால், அழித்து, அழிப்பதாகக், அழிப்பதால், அழிப்பது, அழிவதற்குச், |
| இல்லை | இலை, இலையின்,<br>இல்லம், இல்லாமல், இல்லை, இல்லையென்றால், இல்லையேல் |
| அதி | அதிக, அதிகமாக, அதிகமாகப், அதிகமான, அதிகம், அதிகரிக்கச், அதிகாரங்களில், அதிகாலையிலேயே, அதிகாலையில் |
| | |

| | |
|---|---|
| காடு | காடு, காடுகளிலிருந்து, காடுகளில், காடுகளினால், காடுகளின், காடுகளே, காடுகளை, காடுகளைப், காடுகள், காட்டில் |
| கூறு | கூற, கூறப்படுகிறது, கூறப்படுகின்றது, கூறப்படுகின்றனர், கூறலாம், கூறியுள்ளார், கூறும், கூறுவதற்காக, கூறுவதில், கூறுவர், கூறுவார், |
| சொல் | சொல், சொல்லலாம், சொல்லி, சொல்லிக், சொல்லித், சொல்லில், சொற்களில், சொற்களைத், சொற்கள், சொற்சிறப்பும் |
| நமக்கு | நமக்கு, நமக்குக், நமக்குச், நமக்குப், நமக்கு |
| நல்/நன் | நன்மை, நன்மைகளை, நன்மைகளைத், நன்மைகள், நன்றி, நன்னெறிக் |
| வளர் | வளரும், வளர்கிறது, வளர்ச்சி, வளர்ச்சிக்கும், வளர்ச்சிக்கேற்ப, வளர்ந்த, வளர்ந்திருக்கும், வளர்ந்து, வளர்ப்போம், வளர்வதால் |

மேற்படி அட்டவணையின்படி மாணவர்கள் சுமார் 10 சொற்கள், 77 சொற்களாக திரிப்பாக்கம் கண்டுள்ளன. அச்சொற்களை குழும அடிப்படையில் வேர்ச்சொல்/அடிச்சொல்லின் மூலத்தின் அடிப்படையில் பிரித்து, அவற்றை மேலும் 9 முறையாக எத்துணை முறைகள் மீண்டும் கையாளப்பட்டுள்ளன என்பதனைக் காண முற்பட்டபொழுது, அச்சொற்களின் பயன்பாடு மேலும் சுருக்கமடைவதைக் காண முடிந்தது. இந்த வகையில் மாணவர்கள் முறையே மொத்தம் 10 சொற்களை மட்டுமே இருமுறைகளாகக் கையாண்ட திறத்தினைக் காண முடிகின்றது.

| சொற்கள் | எண்ணிக்கை |
|---|---|
| பெயர்ச்சொல் வகை | 51 |
| வினைச்சொல் வகை | 17 |
| இடைச்சொல் வகை | 0 |
| உரிச்சொல் வகை | 9 |
| எண்ணிக்கைச் சொல் | 0 |
| மொத்தம் | 77 |

**சொற்களின் திரிபாக்கம்: 11**

| | |
|---|---|
| இயற்கை | இயற்கை, இயற்கைப், இயற்கையை, |
| உயிர் | உயிரினங்களுக்கு, உயிரினங்களுக்கும், உயிரினங்களும், உயிரினங்கள், உயிருக்கு, உயிர், உயிர்களுக்கும், |

**சொற்களின் திரிபாக்கம்: 12**

| | |
|---|---|
| இதனால் | இதனால், இதனால்தான், இதனை, இதனைத், இதன் |
| எனவே | எனவே |
| எழு | எழுதலாம், எழுதியுள்ளார், எழுதினார், எழுதும், எழுதுவதில், எழுத, எழுத்தறி, எழுத்தறிவித்தவன், எழுத்துகளில், எழுந்து |
| கட்டு | கட்டுரை, கட்டுரைகளையும், கட்டுரைகள், கட்டுவதனால்தான், கட்டுவார்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன, கட்டொழுங்கை |
| கடை | கடை, கடைக்கு, கடைச்சங்கம், கடைப்பிடிக்க, கட்டிப், |
| கதையைப் | கதை, கதைகளையும், கதைகள், கதைப், கதையை, கதையைப் |
| மகிழ் | மகிழி, மகிழ்ச்சியாக, மகிழ்ச்சியாகவும், மகிழ்ந்த, மகிழ்வர், மகிழ்வார்கள், மகிழ்வின் |
| மக்கள் | மக்களும், மக்கள் |

| | |
|---|---|
| அனை | அனைத்து, அனைத்தும், அனைவரிடமும், அனைவரிடம், அனைவருக்கும், அனைவரும், அன்பாகப், அன்பாகவும், அன்பானவர், அன்பும், அன்றாட, அன்று |

**சொற்களின் திரிபாக்கம்: 13 (பெயர்ச்சொல்)**

| | |
|---|---|
| சிறப்பு | சிறந்த, சிறந்தது, சிறப்பாக, சிறப்பாகப், சிறப்பானது, சிறப்பிக்கவே, சிறப்பித்து, சிறப்பித்துக், சிறப்பு, சிறப்புகளில், சிறப்புப், சிறப்பும், |

**சொற்களின் திரிபாக்கம்: 14 (பெயர்ச்சொல்)**

| | | | |
|---|---|---|---|
| ஆசிரியர் | 40 | 1.44 | ஆசிரியர், ஆசிரியராக, ஆசிரியரானால், ஆசிரியரின், ஆசிரியருக்கு, ஆசிரியருக்குச், ஆசிரியருக்குப், ஆசிரியர், ஆசிரியர்களைப், ஆசிரியர்களையே, ஆசிரியர்கள், ஆசிரியை, ஆசிரியைப், ஆசிரியையை |
| | | | |
| மொழி | | | மொழி, மொழிகளிலேயே, மொழிகளில், மொழிகள், மொழிக்கு, மொழிபெயர்க்கப்பட்ட, மொழியறிவு, மொழியாக, மொழியாகும், மொழியாற்றல், மொழியில், மொழியின், மொழியைப், |

**சொற்களின் திரிபாக்கம்: 16 (வினைச்சொல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| இரு | 4 | 61 | 2.19 | இருக்க, இருக்கிறார், இருக்கிறேன், இருக்கின்றன, இருக்கின்றனர், இருக்கும், இருந்த, இருந்திட, இருப்பதால், இருப்பதால்தான், இருப்பது, இருப்பார், இருப்பிடத்தை, இருப்பிடமாகத், இருப்பிடம் |

**சொற்களின் திரிபாக்கம்: 16 (பெயர்ச்சொல்)**

| | |
|---|---|
| அவர் | அவரின், அவருக்கு, அவருக்குச், அவருக்குப், அவருடனே, அவருடைய, அவரை, அவரைப், அவர், அவர்களின், அவர்களுக்குக், அவர்களுக்குத், அவர்களுள், அவர்களை, அவர்கள் |

**சொற்களின் திரிபாக்கம்: 18 (பெயர்ச்சொல்/வினைச்சொல்)**

| | |
|---|---|
| வாசி | வாசிக்க, வாசிக்கலாம், வாசிக்கும், வாசித்தார், வாசித்தால், வாசித்து, வாசித்துக், வாசிப்பதன், வாசிப்பதாகும், வாசிப்பதால், வாசிப்பது, வாசிப்பதைத், வாசிப்பார்கள், வாசிப்பின், வாசிப்பு, வாசிப்புத், வாசிப்புப் |
| வாழ் | வாழ, வாழ்க, வாழ்கின்றன, வாழ்க்கைக்கு, வாழ்க்கைத், வாழ்க்கையிலும், வாழ்க்கையில், வாழ்க்கையும், வாழ்த்து, வாழ்ந்தாலும், வாழ்ந்துள்ளனர், வாழ்வதற்குத், வாழ்வதால், வாழ்வில், வாழ்வு, வாழ்வுக்கு, வாழ்வோம் |

**சொற்களின் திரிபாக்கம்: 20 (பெயர்ச்சொல் / வினைச்சொல்)**

| | |
|---|---|
| செய்/செயல் | செயல்கள், செயல்படுவார், செயற்கை, செய்கின்றது, செய்கின்றன, செய்த, செய்தார், செய்தார்கள், செய்தால், செய்திகள், செய்து, செய்நூலாமோ, செய்பவர்கள், செய்ய, செய்யலாம், செய்வதற்கும், செய்வர், செய்வேன், செய்வோர், |

**சொற்களின் திரிபாக்கம்: 21 (பெயர்ச்சொல்)**

| | |
|---|---|
| என் | எனும், என், என்கிறோம், என்பதற்கேற்ப, என்பதனை, என்பதால், என்பது, என்பதே, என்பதை, என்பவர், என்பார்கள், என்ற, என்றால், என்று, என்றும், என்றெல்லாம், என்றே, என்ன, என்னுள், என்னை |

**சொற்களின் திரிபாக்கம்: 33 (பெயர்ச்சொல்)**

| | |
|---|---|
| தமிழ் | தமிழ், தமிழக, தமிழராகப், தமிழர், தமிழர்களின், தமிழர்களுக்கு, தமிழர்கள், தமிழன், தமிழில், தமிழின், தமிழுக்காக, தமிழுக்கு, தமிழுக்குத், தமிழுக்கும், தமிழுக்குள்ள, தமிழைப், தமிழ், தமிழ்ச், தமிழ்ப்பற்று, தமிழ்மொழி, தமிழ்மொழி, <br><br>தமிழ்மொழிகளில், தமிழ்மொழிக்கு, தமிழ்மொழிக்குச், தமிழ்மொழிபோல், தமிழ்மொழிய, தமிழ்மொழியாகும், தமிழ்மொழியில், தமிழ்மொழியின், தமிழ்மொழியை, தமிழ்மொழியைப்போல் |

**ஓர் ஒட்டுமொத்தப் பார்வை**

மேற்படிக் காட்டப்பட்ட ஆய்வு முடிவுகள் மாணவர்களது படைப்புகள் பன்முகத்தன்மைகளைக் கொண்டவையாக உள்ளன என்பதனைக் காண முடிந்தது. தமிழ் மொழிக்கே உரித்தான அடிப்படைச் சொல்வகைகளான பெயர், வினை, இடை, உரி என நானாவித சொல்வகைகளையும் இவர்களது படைப்புகளில் காண முடிந்தது. முதல் மூன்று வகைச்சொற்களைப் பற்றி அறிந்திருப்பதும், பயன்பாட்டில் ஏற்புடைய இடத்தில் பயன்படுத்துவதும் பொதுவான எழுத்தறிவுமிக்க ஒருவருக்கு இயல்பாக அமைவது எனலாம். நான்காவது சொல்வகையான உரிச்சொல்லின் கையாடல் அத்தகைய தன்மையன்று. மொழி ஆளுமையும் மொழியாற்றலும் சற்றே அதிகம் இல்லாத நிலையில் இதன் கையாடலை விரவிவரும் நிலையில் காண்பது அரிதாகும். அந்நிலையே இவர்களது படைப்புகளிலும் காண நேரிட்டது.

பெயர்ச்சொல் வகைகள் என்று பார்க்கின், அதிலும் ஒரு வரையறைக்குட்பட்டே இவர்களது படைப்புகள் உருவாக்கம் கண்டுள்ளன. பெயர்ச்சொற்களின் வகைமையான பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றுள், இறுதியாகிய தொழில் பெயர்களை காண்பது குறைவாக இருந்தது. இந்த வரிசையில் /தல்/ (துவைத்தல்), /அல்/ (தேடல்) மற்றும் /அம்/ (நோக்கம்) ஆகிய விகுதிகளின் துணையோடு எழுந்த தொழில்பெயர்களையே காண்கின்றோம். இந்த வரிசையில் /தல்/ விகுதியைச் சார்ந்த தொழில்பெயர் மட்டுமே மாணவர் உணர்ந்து உருவாக்கிய சொல்லாக அமைந்திருக்கின்றது. மாணவர்களது கைவண்ணங்களில் ஆகுபெயர்களின் பயன்பாடு அதிகமாகவே உள்ளது.

வினைச்சொற்களின் வரிசையில் மாணவர்களது மொழியாளுமை போற்றத்தக்க நிலையிலேயே உள்ளது. இந்த வரிசையில் வினைமுற்று, வினையெச்சம், எதிர்மறை, வினாமுற்று எனப் பல்வகை நிலைகளில் இவற்றின் ஆளுகையைக் காண முடிந்தது. தன்னிலை, முன்னிலை மற்றும் படர்கை நிலைகளில் ஒருமை–பன்மை என இருநிலைகளிலும், உயர்திணை-அஃறிணை சார்ந்த வினைமுற்றுகளைப் பயன்படுத்துவதில் இவர்களது ஆளுமை தெளிவாக அமைந்திருப்பதனையும் காண முடிந்தது.

பல்வகை இடைச்சொற்கள் மாணவர்களது படைப்புகளில் விரவி வருவதைக் காண முடிந்தது. இடைச்சொற்களின் வரிசையில் மாணவர்களது படைப்புகளின் அதிகமாகக் கையாளப்பட்டது வேற்றுமை உருபுகளாகும். அனைத்து வேற்றுமை உருபுகளின் பயன்பாட்டினையும் காண முடிந்தது. அதற்கடுத்த நிலையில் தனிநிலை இணைப்பான்கள், உருபு இணைப்பான்கள் என இருவகை இணைப்பான்களின் பயன்பாட்டினையும் கண்கூடாகப் பார்க்க முடிந்தது. இந்த வரிசையில், இட, இய, ஆய், என, ஆக, ஆன, உம், உடன், இருந்து, தல் ஆர், ஆர, ஆகிய, ஆல் போன்றவற்றின் பயன்பாடு அதிகமாகக் காணப்படது.

### உரிச்சொல் பயன்பாடு

மானவர்களது மொழிப்பயன்பாட்டில் உரிச்சொற்களின் கையாடல் மிகவும் குறைவாக உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளில் சுமார் 4 உரிச்சொற்களின் பயன்படு மட்டுமே கையாளப்பட்டுள்ளதைக் காண முடிந்தது. அவை: <u>முது</u>மொழி, மாநிலத்தில், <u>அதி</u>காலையிலேயே, மாவீரர் என்பவையே ஆகும்.

### பிறமொழிச் சொற்தேர்வு

மாணவர்களது படைப்புகளில் தகுமொழி சொற்தேர்வு நிறைவாகக் கையாளப்பட்டிருப்பதைக் காணமுடிந்தது. தகுந்த இடங்களில் தேவை கருதி, பேச்சு மொழிச் சொற்களையும், பிறமொழிச் சொற்களையும் பயன்படுத்தி இருந்தனர். "நாசி ஆயாம்" எனும் மலாய் மொழிச் சொல்லும், மற்றும் கேமரன் மலை எனும் கலப்புச் சொல்லும் மட்டுமே இந்த வரிசையில் காண முடிந்தது. இயன்ற வரையிலும் மாணவர்கள் தூயச் சொற்களையே முழுமையாகக் கையாண்டு உள்ளனர் என்பது பாராட்டப்பட வேண்டிய செயலாகும்.

### தொடர்களின் பயன்பாடு


மாணவர்களது எழுத்துப் படிவங்களில் பல்வகைத் தொடர்களின் பயன்பாடுகளைக் காண முடிந்தது. எழுவாய்த்தொடர், விளித்தொடர், வேற்றுமைத்தொடர், வினைமுற்றுத்தொடர், வினையெச்சத் தொடர், பெயரெச்சத்தொடர், இடைத்தொடர், உரித்தொடர், அடுக்குத்தொடர் ஆகியவற்றின் பயன்பாடுகளை ஓரளவு பார்க்க வழியேற்பட்டது. இந்த வரிசையில் பெயரடை, வினையடைகளின் கையாளுமையினையும் காண முடிந்தது.


வாக்கியங்களின் பயன்பாடு சொல்லத்தக்க நிலையில் இருந்ததைக் காண முடிந்தது. மாணவர்கள் பொதுவாகவே,


அ. தனிவாக்கியங்கள்
ஆ. தொடர் வக்கியங்கள்
இ. கலப்பு வாக்கியங்கள்

ஆகியவற்றைப் பயன்படுத்தியுள்ளதைக் காண இயன்றது. அவர்களது வாக்கிய ஆளுமையினை விவரிக்கும் பட்டியல் கீழ்வருமாறு அமைந்துள்ளது.

| | ஆண்டு 4 | ஆண்டு 5 | ஆண்டு 6 |
|---|---|---|---|
| 1 : தனி வாக்கியங்கள் | 20 | 43 | 0 |
| 2 : தொடர் வாக்கியங்கள் | 16 | 11 | 1 |
| 3 : கலவை வாக்கியங்கள் | 3 | 1 | 10 |




## தொகைச்சொற்களின் பயன்பாடு

சொற்களைக் கையாளும் தன்மையும் ஒரு போர்வீரன் போர்க்கருவிகளைக் கையாளும் முறையும் ஒன்றே. அதன் பயன்முறை எவ்வாறு இருக்க வேண்டும் என ஃபுல்பர்ட் பின்வருமாறு குறிப்பிடுவார்.

> நீ சொல்ல விரும்புவதை எடுத்துரைப்பதற்கு ஒரேயொரு சொல்லே இருக்கிறது. அதற்கு உயிர் கொடுப்பதற்கு ஒரேயொரு வினையே இருக்கிறது. அதனை விசேடிப்பதற்கு ஒரேயொரு பெயரடையே இருக்கிறது. அந்தச் சொல்லை, அந்த வினையை, அந்தப் பெயரடையை நீ தேடிப் பிடிக்க வேண்டும். அதற்கு ஒத்த சொல்லை நீ இட்டுக்கட்டக் கூடாது. உனது கெட்டித்தனத்தையும் கைவண்ணத்தையும் காட்டிச் சமாளிக்கக் கூடாது. - (A letter from Flaubert to Maupassant).

இத்தகைய வண்ணத்தில் மிகவும் நிதானமாக, தேவையான சொல்லைத் தேவையான இடத்தில் கையாளுவது தனிச் சிறப்பு எனக் குறிப்பிடுகின்றார். தனிநிலையாக ஆயுதத்தைக் கையாளும் திறனும், இரண்டு கருவிகளை ஒருசேர கையாளும் முறையும் அவனது வேகத்தையும் விவேகத்தையும் காட்டும்.

அதேபோல இரண்டு சொற்கள் இனைந்தநிலையில் தொகைகளாக அமைந்துவரும் சொற்களைக் கையாளும் திறன்பெற்ற மாணவர்களின் மொழித்திறன் தனித்துவமிக்கது என்பதில் ஐயமில்லை. அந்த வரிசையில் வேற்றுமைத்தொகை, பண்புத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை, உம்மைத்தொகை, உவமைத்தொகை, வினைத்தொகை, அன்மொழித்தொகை என இதன் எண்ணிக்கை நீளமாக இருந்தாலும் மாணவர்களது படைப்புகளில் அதிகமாகக் கையாளப்பட்ட வகையாக முதல் மூன்றாக நிற்கும் வேற்றுமைத்தொகை, பண்புத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆகியவையும் ஓரிரு உம்மைத்தொகை (இரவுபகல்), வினைத்தொகை (குடிநீர்), சொற்களையே காண முடிந்தது. பின்னிரண்டு தொகைகளான உவமைத்தொகை, அன்மொழித்தொகை ஆகியவற்றைக் காண இயலவில்லை. இந்த வகையில் மொத்தம் 134 தொகைச்சொற்களின் பயன்பாட்டினைக் காண முடிந்தது.

| | தொகைநிலைத் தொடர்கள் |
|---|---|
| 1 :கட்டுரைத் தலைப்புகள் = தமிழ் மொழி | 65 |
| 2 : கட்டுரைத் தலைப்புகள் = தமிழ் கலாச்சாரம் | 16 |
| 3 : கட்டுரைத் தலைப்புகள் = ஆசிரியர் | 40 |
| 4 : கட்டுரைத் தலைப்புகள் = இயற்கை | 37 |
| 5 : கட்டுரைத் தலைப்புகள் = வாசிப்பின் நன்மை | 24 |

**பொன்மொழிகள்/சான்றோர் மொழிகள்**

மாணவர்களது படைப்புகளில் சான்றோர்களின் மொழிகள் மற்றும் பொன்மொழிகள் கூட விரவி வருதைக் காண முடிந்தது. இதன் எண்ணிக்கை 19-ஆக இருந்தது. அவற்றுள் சிறப்புமிக்க பயன்பாட்டினைக் கீழே காண்போம்.

| | |
|---|---|
| 1. | பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ? பாரிலுள்ள நூலெல்லாம் வள்ளுவர் செய்நூலாமோ?-உரை சிறப்பு என உயர்த்திப் பாடுகின்றனர், |
| 2. | தமிழ் பெருமக்கள், திருவள்ளுவரைத் தெய்வப்புலவர், செந்போதர், பெருநாவலர், மாதானுபங்கி, முதற்பாவலர், பொய்யாமொழிப் புலவர் என சிறப்பித்து அழைப்பர். |
| 3. | தமிழ்மொழியின் அழகுக்கு அழகுச் சேர்க்கும் வகையில் ஆபரணங்களாகத் திகழ்பவை ஐம்பெரும் காப்பியங்கள். |
| 4. | இதனைத் தவிர்த்து கொன்றை வேந்தன், ஆத்திச்சூடி, நாலடியார், திருக்குறள் போன்ற நூல்களும் நமக்குச் சிறந்த வழிகாட்டியாக இருக்கின்றன. |
| 5. | மேலும், தமிழ்மொழியில் திருவள்ளுவர், சுந்தரர், புலவர் கணியன் பூங்குன்றனார், பாரதியார் போன்றவர்கள் புகழ்வாய்ந்தவர்கள் ஆவர். |
| 6. | தமிழ்மொழியின் இனிமையை உலகிற்கே கூறும் வகையில், "யாமறிந்த மொழிகளிலேயே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என தமிழ் மொழியைப் போற்றி புகழ்ந்துரைத்துள்ளார் மகாகவி பாரதியார். |

| | |
|---|---|
| 7. | தமிழ்மொழியின் இனிமையின் மீது ஈர்ப்பு கொண்ட "கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி" என்பவர் வீரமாமுனிவர் என்று தன் பெயரையே தமிழ்மொழியில் மாற்றிக் கொண்டார். |
| 8. | திருக்குறளை இலத்தின் மொழியில் மொழி பெயர்த்தவரும் இவரே. செந்தமிழ் இலக்கணம், ஞானக்கண்ணாடி, வேத விளக்கம் போன்ற நூல்களை இயற்றி தமிழுக்குத் தந்துள்ளார். |
| 9. | ஜி.யு.போப் தமிழ்மொழியின் மீது உள்ள பற்றை நிலைநாட்ட, தன் கல்லறையில் ‘இங்கு ஒரு தமிழன் உறங்கிக் கொண்டிருக்கிறான்’ என்று பெருமையுடன் எழுதியுள்ளார். |

இந்த வரிசையில் ஒரு சினிமாப் பாடலின் கையாடலும் இடம்பெற்றுள்ளது. அது:

| | |
|---|---|
| 1 | பார்த்தேன் ரசித்தேன் பக்கம் வர துடித்தேன் அந்த மலைத்தேன் இவளென மலைத்தேன்" என்ற வரிகளுக்கேற்ப தமிழைப் பார்க்க படிக்க, இரசிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். |

## மரபுத்தொடர்கள் / பழமொழிகள்

மரபுத்தொடர்கள்/பழமொழிகளின் பயன்பாட்டினை அதிகமாகக் காண இயலவில்லை. அதிகப்பட்சமாக கொடிகட்டிப் பறக்கச் செய்வேன், வெள்ளிடைமலையாக, கிணற்றுத் தவளைபோல் ஆகிய மரபுத்தொடர்களின் பயன்பாட்டினை மட்டுமே காண முடிந்தது. மரபுத்தொடர்கள் வரிசையிலும் சில கையாளப்பட்டுள்ளன. அவை,

அ. கண்டதை கற்க பண்டிதன் ஆவான்
ஆ. தைப்பிறந்தால் வழி பிறக்கும்
இ. 'பிள்ளையைப் பெற்றால் கண்ணீர், தென்னையைப் பெற்றால் இளநீர்' என்பார்கள்.

## முற்குறிப்புக் கூற்றுகள்

மாணவர்கள் சிலரது படைப்புகளில் முன்குறிப்புச் செய்திகள் சிலவும் விரவிவந்துள்ளன. இவை அவர்களது மொழியாளுமையினை உயர்த்திக் காட்டுவதாக இருந்தாலும், அடிப்படையில் இந்த நிலையில் இருக்கும் மாணவர்களுக்கு இத்துணை ஆளுமை இருக்க வாய்ப்புள்ளதா என ஐயப்படவும் நேரிடுகின்றது. இணையங்களில் இருக்கும் கட்டுரைகள் அவற்றின் சாரங்கள் இங்கு மறுபதிவேற்றம் செய்யப்பட்டவையாகவே உள்ளன. கீழ்க்காணும் முற்குறிப்புக் கூற்றுகள் இதற்குச் சான்று பகரும்.

| |
|---|
| அவர்களுள் நாம் அனைவரும் அறிந்த பாரதியார், கம்பர், கண்ணதாசன், இரா.பி.சேதுப்பிள்ளை, காளமேகப் புலவர், ஆங்கிலத்தில் இருந்த தன் பெயரை தமிழில் மாற்றிய வீரமாமுனிவர், தந்தை பெரியார் போன்றவர்களின் பெயர்கள் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படத்தக்கவை. |
| பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ? பாரிலுள்ள நூலெல்லாம் வள்ளுவர் செய்நூலாமோ?- உரை சிறப்பு என உயர்த்திப் பாடுகின்றனர், |
| தமிழ் பெருமக்கள், திருவள்ளுவரைத் தெய்வப்புலவர், செந்போதர், பெருநாவலர், மாதானுபங்கி, முதற்பாவலர், பொய்யாமொழிப் புலவர் என சிறப்பித்து அழைப்பர். |
| தமிழ்மொழியின் அழகுக்கு அழகுச் சேர்க்கும் வகையில் ஆபரணங்களாகத் திகழ்பவை ஐம்பெரும் காப்பியங்கள். அவை சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, தொல்காப்பியம் மற்றும் விவேக சிந்தாமணி. |

### எடுத்தாளப்பட்ட செய்திகள்

மாணவர்களது படைப்புகளில் சில எடுத்தாளப்பட்ட செய்திகள் விரவிவருவதையும் காண முடிந்தது. மூலிகையைப் பற்றி எழுதப்பட்ட கட்டுரையில் இதனைக் காண முடிந்தது.

- இஞ்சியால் வயிற்றுக் கோளாறுகள் நீங்கும்; இரத்த ஓட்டம் சீராகும்; மன அழுத்தமும் குறையும்.
- ஏலக்காய் செரிமான சக்தியைக் கூட்டும்; பசியைத் தூண்டும்; விக்கலை நிறுத்தும்.
- மஞ்சள் கிருமிநாசினி. மஞ்சலைப் பயன்படுத்துவதால் உடல் எடை குறையும்; கொழுப்பு குறையும்; சருமத்தின் அழகு கூடும்.
- சீரகமும் எலுமிச்சைச் சாறும் உடலில் தேவையற்ற கொழுப்புகளை நீக்கும்.

### தனித்துவம் வாய்ந்த சொற்கள்

மாணவர்களது படைப்புகளில் தனித்துவம் வாய்ந்த சொற்களாக ஒரிரு சொற்களையும் காண முடிந்தது. அந்த வரிசையில் /மகிழி/, /மெதுபயில்/, /அறப்பணி/, /உயிர்வளி/ போன்ற குறிப்பிடத்தக்க சொற்களாகும். இவற்றுள் உயிர்வளி ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பாக இருந்தாலும், தூயத் தமிழ்ச் சொல்லாகக் கையாளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஏனைய சொற்கள் அதிகமாகக் கையாளப்படாத சூழலில் இளமெழுத்தாளர்களின் கைகளில் விரவிவருவது மகிழ்ச்சி அளிக்கின்றது.

### இலக்கணப் பிழைகள்

மாணவர்களது படைப்புகளில் சிற்சில இலக்கணப் பிழைகள் விரவி வருவதையும் காண முடிந்தது. இவற்றுள் ஒற்றுப் பிழைகளே முக்கிய இடத்தைப் பிடித்திருக்கின்றன, இது வளரும் பருவத்து எழுத்துப்படைப்புகளாக இருப்பதனால், இதற்கு முக்கியத்துவம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. இந்த இளம்வயதில் திருத்தப்படாத பிழைகள் மேனிலைக்கல்வி உலகிலும் பயணிக்கலாம். அதோடு, இதனை வாசிக்கும் ஏனைய மாணவர்களுக்கும் இதன் தாக்கம் பரவிவிட இடமுள்ளது. இவை மாணவர்கள் தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டிய இடங்களாகவே பார்க்க வேண்டியுள்ளது. ஓரிடத்தில் கருத்துக்குற்றமும் இடம்பெற்றுள்ளது:

- தமிழ்மொழியின் அழகுக்கு அழகுச் சேர்க்கும் வகையில் ஆபரணங்களாகத் திகழ்பவை ஐம்பெரும் காப்பியங்கள். அவை சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, தொல்காப்பியம் மற்றும் விவேக சிந்தாமணி.

### முடிவுரை

மாணவர் அங்கங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் படைப்புகள் உருவாக்கப்பட்ட படைப்புகள் யாவும் வெறுமனே பொழுதுபோக்குப் படைப்புகளா என வினா எழுகின்றது. இப்பக்கத்தில் அமைந்துள்ள எழுத்துப்படைப்புகள் சுருக்கமான கருத்துகளைக் கொண்ட பகிர்வுகள் படிப்பவர்களின் சிந்தனைகளைத் தூண்டும் ஒன்றாக அடைந்துள்ளதால் அவர்களில் வாசிப்புத்திறனையும் மேம்படுத்தத் துணைசெய்யும் இளம்படைப்பாளர்களின் இலக்கிய வடிங்களாகவே உள்ளன.

தாயின் கருவில் உருவாகும் குழந்தை எவ்வாறு உள்ளளவிலும் வெளியளவிலும் முழுமைத் தன்மைக் கொண்ட அற்புதப் படைப்பாக உருவாக்கம் கண்டு, வெளிவந்து, நாளொரு வண்ணம், பொழுதொரு மேனியாக வளர்ந்து மெருகுண்ட வளமைக்கொண்ட செல்வமாக வளர்கின்றதோ, அதுபோலவே மாணவர்கள் அங்கத்தில் இடம்பெற்ற மானவர்களின் கட்டுரைகளைக் காண முடிகின்றது. மாணவர்கள் ஒரு கட்டுரை உருவாக்கும் தன்மையைப் பெற்று, தங்களைப் படைப்பாளிகள் எனும் தகுதிக்கு உயர்த்திக் கொண்ட நிலையினையே காண்கின்றோம். மொழியாற்றல் ஆளுமை நிலையில் இது நல்லதொரு நிலையே. போற்றத்தக்க நிலையே.

எனினும், முழுமை எனும் தகுதியை அடையாத படைப்புகளாகவே இவை விளங்குகின்றன என்பதனை நாம் மறுக்க இயலாது. மாணவர்கள் கொண்டுள்ள ஆளுமையினை மேற்படி ஆய்வின்

முடிவுகள் காட்டுகின்றன என்பதனைக் கண்கூடாகக் காண முடிந்தாலும், அவையே அவர்களது இயல் ஆளுமையின் குறைவினையும் சுட்டிக்காட்டுகின்றன. குறுகிய சொல்லாட்சி வட்டத்தில் வளர்ந்துவரும் சூழலே காணப்பட, மாணவர்கள் கூறியதையும், ஆசிரியரிடம் கற்றதையும் மறுகூறல் செய்துள்ளமை தவிர்த்து, சுய படைப்புகளை வெளிப்படுத்தும் நிலைக்கு வளர வேண்டிய கட்டாயம் உள்ளது.

## மேற்கோள்கள்

Halliday, M.A.K. (1971). 'Language in a Social Perspective'. The Context of Language. *Educational Review*. University of Birmingham, 23.3,16-188.

Halliday, M.A.K. (1986). *Spoken and Written Language*. Melbourne: Deakin University Press (Language & Learning).

Leech, G. N. & Short, M. (1981). *A Linguistic Introduction to English Fictional Prose*. London: Pearson Longman.

Mohana Dass Ramasamy. 2011. *Topics in The Morphophonology of Standard Spoken Tamil (SST): An Optimality Theoretic Study* (Unpublished doctoral dissertation). School of English Literature, Language and Linguistics, University Of Newcastle Upon Tyne, United Kingdom.

Sivakumar Subramaniam. 2018. *Kesusasteraan Tamil Kanak-kanak Malaysia: Satu Kritikan Moral* (Unpublished doctoral dissertation). Fakulti Sastera & Sains Sosial, Universiti Malaya, Kuala Lumpur.

Worth, G. J. (1955). Conrad's Debt to Maupassant in the Preface to" The Nigger of the" Narcissus". *The Journal of English and Germanic Philology*, *54*(4), 700-704.

எஸ். குமரன். (2018). *மலேசியாவில் சிறுவர் இலக்கியம் – வரலாறும் வளர்ச்சியும்*. மோகன தாஸ் ராமசாமி (தொகுப்பாசிரியர்), முதலாம் உலகத் தமிழ்க் குழந்தை இலக்கிய மாநாட்டு ஆய்வடங்கல் (பக். 320-333). (மலாயாப் பல்கலைக்கழகம்: இந்திய ஆய்வியல் துறை. மலேசியா).

மலேசிய நண்பன் நாளிதழ், 1.7.2018 முதல் 28.4.2019 வரை.

மோகன தாஸ் ராமசாமி. (2015). *அடிப்படைத் தமிழ் இலக்கணம்*. கோலாலம்பூர்: மலாயாப் பல்கலைக்கழகம்:

மோகன தாஸ் ராமசாமி. (2018). *மலேசிய சிறுவர் இலக்கியங்கள் தொடக்கம் முதல் 2010 வரை: கருப்பொருள்களும் அவற்றின் அமைப்புமுறைகளும்*. மோகன தாஸ் ராமசாமி (தொகுப்பாசிரியர்), முதலாம் உலகத் தமிழ்க் குழந்தை இலக்கிய மாநாட்டு ஆய்வடங்கல் (பக். 342-353). (மலாயாப் பல்கலைக்கழகம்: இந்திய ஆய்வியல் துறை. மலேசியா).

*மென்பொருள் NVIVO -12 Plus